www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு
16-31 மார்ச்'91 6/9 விலை ரூ.2



## பின்னி மில்: உடையாரின் கைவரிசை!




படிப்பகம்

www.padippakam.com

# சாம்சன் கம்பெனித் தொழிலாளரை ஒடுக்க போலீசு - முதலாளி கூட்டு, சதி

'குட்ட குட்ட குனிபவர்கள் அல்ல; நிமிர்ந்து நிற்பவர்கள் தான் தொழிலாளர்கள்' - என்பதை நிரூபித்து வருகிறார்கள் சாம்சன் கம்பெனித் தொழிலாளர்கள்!

சாம்சன் ரப்பர் இண்டஸ்ட்ரீஸ்; அம்பத்தூர் சிட்கோ தொழிற்பேட்டையில் 18 வருடமாக இயங்கி வரும் நிறுவனம். 'ஹெலிகார்ட்' என்ற பெயரில் 'V' பெல்ட்டுகளையும் மின்விசறி பெல்ட்டுகளையும் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனத்தின் முதலாளி ஜே.வி. தர்மதுரை தொழிலாளர்களை ஒடுக்குவதிலும் எதிர்ப்புகளை சமாளிப்பதிலும் கைதேர்ந்தவர். 1973-ல் AITUC - சங்கம் தொடங்கிய பொழுதும் சரி, 1979ல் INTUC - சங்கம் தொடங்கப்பட்ட பொழுதும் சரி. தொழிலாளர்களை தாக்கி நயவஞ்சகமாக தொழிற்சங்கத்தை உடைத்தார்! 'மெமோ', வேலை நீக்கம் என்று மட்டுமல்லாமல், அடியாட்களை வைத்து தொழிலாளர்களை



மிரட்டியும் தாக்கியும் பழிவாங்கினார். 'லேபர் இன்ஸ்பெக்டர்' ஈ.எஸ்.ஐ. மற்றும், பி.எஃப் அதிகாரிகளை கைக்குள் போட்டுக் கொண்டு நீக்கிய தொழிலாளர்களிடத்தில் புதியவர்களை சட்ட விரோதமாக வேலைக்கு அமர்த்தி லாபத்தைக் குவித்தார். கம்பெனியில் தனக்கு ஆள்காட்டிகளாகவும் அடியாட்களாகவும் செயல்படும் கருங்காலிகளுக்கோ சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்தார். இதர தொழிலாளர்களுக்கோ அரசு நிர்ணயித்த குறைந்த பட்ச சம்பளம் கூட தருவதில்லை.

12 வருடம் வேலை செய்தவர்களுக்கு 700 ரூபாய்; ஏனையவர்களுக்கு ரூ.300 முதல் 500 வரை சம்பளம்! எத்தனைநாள் தான் இக்கொடுமையை தொழிலாளர்கள் பொறுத்துக் கொள்வார்கள்? துணிவுடன் 20.5.90 அன்று ஜனநாயக தொழிலாளர் சங்கத்தை (DLU - வை) தொடங்கினர். ஜே.வி. தர்மதுரையின் பினாமி நிறுவனமான வேலப்பன் சாவடியில் இயங்கும் ராஜ் இண்டஸ்ட்ரீஸ் தொழிலாளர்களும் இச் சங்கத்தில் இணைந்தனர்.

வழக்கம்போலவே ஜே.வி.தர்மதுரையும் தனது 'வேலையை' தொடங்கினார். CID உளவு போலீசை விட்டு தொழிலாளர்கள் இல்லாத நேரம் பார்த்து வீட்டில் பெண்களை மிரட்டினார். சங்கத்தை கலைத்து விட்டு வந்தால் சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதாக ஆசை காட்டினார். வேலப்பன் சாவடியிலுள்ள பிரிவை இழுத்து மூடி சங்கத் தொழிலாளர்களை பழிவாங்கினார். இதுவரை 35 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

நிர்வாகத்தின் பழிவாங்கலுக்கு எதிராகவும், சம்பள உயர்வு கோரியும், சங்கத்தை அங்கீகரிக்கக் கோரியும் முறையீடு, மனு, உண்ணாவிரதம் மூலம் போராடிய தொழிலாளர்கள், எதுவும் பயனளிக்காததால், 23.2.91 முதல் உள்ளிருப்பு வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர். 'நட்டம்' என காரணம் காட்டி இக்கம்பெனியையும் இழுத்து மூட முயன்ற ஜே.வி.தர்மதுரையின் சதியை உணர்ந்த தொழிலாளர்கள், உயர்நீதிமன்றத்தின் மூலம் 23.2.91 அன்றே கம்பெனியை மூடவோ, எந்திரம் மற்றும் எவ்வித பொருட்களை வெளியே எடுத்துச் செல்லவோ கூடாது என்ற தடை உத்திரவு வாங்கினர்.

நிர்வாகம் பிரச்சினையைத் தீர்க்க அக்கறையற்றே இருக்கிறது. தொழிலாளர் துறை உதவி ஆணையர் முன்பாக பேச்சுவார்த்தை நடத்தலாம் என ஒத்துக்கொண்டு பேச்சுவார்த்தைக்கு வரவேயில்லை. மாறாக போராடும் தொழிலாளர்களை ஒடுக்க ஜே.வி.தர்மதுரை போலீசு அதிகாரி-ஐ.ஜி.யைப் பார்த்து முயற்சி செய்கிறார். ஏமாந்த பொழுது தொழிலாளர்களை தாக்குவதற்கென்று தர்மதுரையின் அடியாட்கள் தினம் கம்பெனியைச் சுற்றி வருகிறார்கள். அம்பத்தூர் எஸ்டேட் போலீசு நிலையத்திற்குச் சென்று தொழிலாளர்கள் பாதுகாப்புக் கொடுக்கக் கோரியும் எவ்வித பயனும் இல்லை. ஆனால், கருங்காலிகளுக்கும், M.D.க்கும் கம்பெனி தொடங்குவதற்கு முன்பே வந்து தினம் பாதுகாப்பு கொடுக்கிறது போலீசு!

நிர்வாகத்தின் அடக்கு முறைக்கு அஞ்சாமல் போராட்டத்தை தொடரும் தொழிலாளர்கள் பிரச்சினையை கம்பெனிக்குள் முடக்காமல் பரவலாக பொதுமக்களிடமும் பிற தொழிலாளர்களிடமும் எடுத்துச் சென்று ஆதரவு திரட்டுவதும், சரியான அரசியல் தலைமையுடன் நிர்வாகத்தின் சதிகளை முறியடித்து முன்னேறுவதும் வேண்டும்.

— தகவல்: ம.க.இ.க., சென்னை.



## திருமங்கலம்

## ஹோமியோ மாணவர் போராட்டம்

# அலட்சியப்படுத்தும் அதிகாரிகள் - முதல்வர்

மதுரை திருமங்கலம் அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில்...

- முறையான கட்டிட வசதி இல்லை. வகுப்புகள் நகரின் இரு வேறு இடங்களில் நடக்கின்றன. ராமநாதபுரம், தாம்பரத்தில் கட்டிடம் கட்ட இடம் ஒதுக்கப்பட்டும் அதற்கான செயல்பாடுகள் ஏதும் இல்லை.
- சோதனைக் கூடம், விடுதி வசதி ஏதும் இல்லை. மாணவ - மாணவிகள் நகரில் தங்க இடம் கிடைக்காமல் அவதிப்படுகின்றனர்.
- தனியான மருத்துவமனை இல்லை. தொழுநோய் பிரிவில் 14 படுக்கை உள்ள சிறிய அறை மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற கல்லூரியின் பல அவல நிலைமைகளுக்கு எதிராகவும், 'பிரேக் சிஸ்டத்தை அகற்றுதல்', 'செமஸ்டர்' முறையை புகுத்துதல், 'கம்பைண்டு பாஸ்' வழங்குதல், வருகைப் பதிவு பிரச்சினைகள் தொடர்பாகவும் கோரிக்கைகளை வலியுறுத்தி மாணவர்கள் 25.2.90 முதல் போராடி வருகின்றனர்.

முதல் 2 நாள் வகுப்புகளை புறக்கணித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். மூன்றாம் நாள் உள்ளிருப்பு உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். அரசு அதிகாரிகளின் தலையீடு காரணமாக தொடர் உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றினர். 30 மாணவிகள் உட்பட சுமார் 80 பேர் இப்போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். 1.3.91 அன்று மூவர் மயங்கி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். வெகுண்டெழுந்த மாணவர்கள் அன்று மாலையே திருமங்கலம் ராஜாஜி சிலையிலிருந்து முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் நடத்தி, பிரச்சினையை வீதிக்கு கொண்டு வந்து அம்பலப் படுத்தினர்.

கல்லூரி முதல்வர் அடாவடித்தனமாக மாணவர்களை சந்தித்து பேசக்கூட மறுத்து வருகிறார். மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்த பொழுது தாஜா செய்ய வந்த அரசு அதிகாரிகள், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என போராட்டத்தை மாற்றியபின் திரும்பிக்கூட பார்க்கவில்லை. கல்லூரி நிர்வாகமும் சரி, அரசும் சரி மாணவர்களின் நியாயமான கோரிக்கைகளை அலட்சியப் படுத்தியே வருகிறது. மாணவர்கள் உறுதியுடன் போராட்டத்தை தொடர்ந்து சக கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் பிரச்சினையை மேலும் பரவலாக எடுத்துச் சென்று ஆதரவு திரட்ட வேண்டும். நிர்வாகத்திற்கும் அரசிற்கும் நிர்ப்பந்தம் அளிக்கும் போராட்டங்களை மேற்கொள்ளவும் தயாராக வேண்டும்.

— தகவல்: ம.க.இ.க., மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

ஆறாம் ஆண்டு

9

16 - 31 மார்ச் '91

உள்நாடு :
தனி இதழ் : ரூ.2
ஆண்டு சந்தா : ரூ.48

வெளிநாடுகள் :
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா : US $ 11

படைப்புகள் அனுப்பவும் மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்:

செ.மதியழகன்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# தோல்வியடைந்தது - நாடாளுமன்றபோலிஜனநாயகம்

நித்திய கண்டம் பூரண ஆயுசு என்பதைப் பிறவியிலேயே கொண்ட சந்திரசேகரின் சிறுபான்மை அரசு, ஆட்சிக்கு வந்த 117 நாட்களுக்குள் பதவி விலகிவிட்டது. அதைத் தொடர்ந்து தலைநகர் டெல்லியில் ஒரு வார காலத்திற்கு அரசியல் நெருக்கடி முற்றி, நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பில் எவையெல்லாம் புனிதமானவை, மாண்புடையவை என்று பசப்பினார்களோ, அவையெல்லாம் நிர்வாணமாகி நிற்கின்றன. பொதுத் தேர்தல் நடந்து முடிந்த 15 மாதங்களுக்குள் இரண்டு சிறுபான்மை அரசுகள் கவிழ்ந்து நாடாளுமன்ற அரசியல் அமைப்பே நிலைகுலைந்து பரிகசிக்கத்தக்க நிலையை எட்டிவிட்டது.

## ராஜீவின் நிர்பந்தமும் சந்திரசேகரின் பதவி விலகலும்

சந்திரசேகர் அரசுக்கு ஆதரவு என்ற பெயரில் அதன் கையை முறுக்கி காரியங்களைச் சாதித்து வந்த ராஜீவ் கும்பல், தனது வீட்டை அரியானா மாநிலப் போலீசார் உளவு பார்த்ததாகக் கூறி நாடாளுமன்றத்துக்கு வராமல் புதிய நெருக்கடியை ஏற்படுத்தியது. கடந்த மார்ச் 4-ஆம் தேதியன்று அரியானாவின் இரு போலீசார் ராஜீவ் மாளிகையின் அருகே சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதாகக் கூறி புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டனர். உடனே தனது அரசுக்கு ஆதரவளித்து வரும் காங்கிரசுக் கட்சித் தலைவரான ராஜீவையே உளவு பார்க்க சிறுபான்மை சந்திரசேகர் அரசு துணிந்து விட்டதாகக் கூப்பாடு போட்டு, காங்கிரசார் பட்ஜெட் கூட்டத் தொடரின் போது நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் வராமல் சந்திரசேகர் அரசை மிரட்டினர்.

இதற்கெதிராக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், விசாரணைக் கமிஷன் அமைப்பதாகவும் சந்திரசேகர் வாக்களித்த போதிலும், அரியானா முதல்வர் தமது அரசு அப்போலீசாரை உளவு பார்க்க ஏவிவிடவில்லை என்று உறுதியளித்த போதிலும் ராஜீவ் கும்பல் அதை ஏற்க மறுத்து அரியானா சட்டசபையைக் கலைக்குமாறு நிர்பந்தித்தது.

ஏற்கனவே குறைப் பிரசவமாக இடைக்கால பட்ஜெட்டை காங்கிரசின் மேற்பார்வையில் தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த சந்திரசேகர் அரசு, சபைக்கு வராமல் கழுத்தறுக்கும் காங்கிரசின் நடவடிக்கையால் விழிபிதுங்கி நின்றது. ஏனெனில் பட்ஜெட்டை நிறைவேற்ற காங்கிரசின் ஆதரவு தேவை. நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தோல்வியடைந்தால் அரசே நிலைகுலைந்து விடும். இதற்கு முன்பு அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பிய விவகாரம், கட்சி மாறி வந்த தனது கட்சியின் 5 எம்.பி.க்களை மந்திரி சபையிலிருந்து நீக்குமாறு காங்கிரசு கொடுத்த நிர்பந்தம், சையது மோடி கொலைவழக்கில் சிக்கிய சஞ்சய் சிங்கை பதவியிலிருந்து விரட்டுமாறு கொடுத்த மிரட்டல், தமிழக சட்டமன்றத்தைக் கலைக்கச் சொன்னது — என்று அடுத்தடுத்து ராஜீவ் கும்பலின் மிரட்டலுக்குப் பணிந்து அவற்றைச் செயல்படுத்திய சந்திரசேகர், இப்போதைய புதிய மிரட்டலைச் சகித்துக் கொள்ள முடியாமல் பதவி விலகுவதாக அறிவித்தார்.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. தேர்தலை சந்திக்க அஞ்சும் ராஜீவ் கும்பல், சந்திரசேகர் அரசை மிரட்டிப் பணிய வைத்து, எதிர்க்கட்சி மாநில அரசுகளைக் கவிழ்த்து, கவர்னர் மற்றும் அதிகார வர்க்க நிர்வாக எந்திரத்தின் மூலம் தனக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கத் தொடர்ந்து முயற்சித்து வந்தது. அதேவகையில் ஏதாவதொரு காரணத்தைச் சொல்லி சந்திரசேகர் அரசையும் கவிழ்த்துவிடும் என்பது யாவரும் எதிர்பார்த்தது தான். எனவேதான் கொட்டை போட்ட அரசியல் பெருச்சாளியான சந்திரசேகர், அடுத்த தேர்தலுக்கு எந்தத் துருப்பு சீட்டும் இல்லாமல் தான் கவிழ்க்கப்படுமுன்னே, தானே பதவி விலகி காங்கிரசுக்கு ஆப்பு வைத்தார். மேலும், நிழல் மந்திரிசபை அமைத்துக் கொண்டு, சாதாரண விஷயங்களைக் கூட பெரிதுபடுத்தி மிரட்டும் காங்கிரசின் நிர்பந்தங்களுக்கு தொடர்ந்து பணிந்து போனால் பதவிக்காக தனது கட்சியையே பலியாக்க வேண்டி வரும்; தனது கட்சிக்கு முகமே இல்லாமல் நாளை அரசியல் துறவறத்தை மேற்கொள்ள வேண்டிய அவமானகரமான நிலைமை ஏற்படும் என்று பீதியடைந்து "ராஜீவின் காலடியில் புழுவாகக் கிடந்த சந்திரசேகர் புலியாக மாறினார்". தனது மந்திரிசபை பதவி விலகுவதாகவும், நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்துமாறும் குடியரசுத் தலைவரிடம் கோரினார்.

## நெருக்கடியில் சிக்கிய நாடாளுமன்ற ஜனநாயகம்

எதிர்பாராத இந்த முடிவைக் கண்டு ராஜீவ் கும்பல் பீதியில் உறைந்து போனது. ஜனதாதள கட்சிகளிலிருந்து பலரை விலைக்கு வாங்கி பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சி அமைக்க முயன்று வந்த அதன் பகற்கனவு மணற்கோட்டையாக சரிந்து விழுந்தது. மறுபுறம் சிறுபான்மை அரசின் பட்ஜெட், நம்பிக்கை ஓட்டுக்காக நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாத நிலையில் கிடந்தது. அது நிறைவேறாவிட்டால் நாடாளுமன்ற அரசியல் அமைப்புக்கே அவமானமாகிவிடும். இதனால் அரசு கருவூலத்திலிருந்து நிதியை எடுக்க முடியாது. ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாது. அரசே ஸ்தம்பித்துப் போய்விடும். மேலும், சந்திரசேகர் அரசுக்கு தனது ஆதரவை விலக்கிக் கொள்வதாக காங்கிரசுக் கட்சி அதிகார பூர்வமாகவும் அறிவிக்கவில்லை. இதனால் வேறு மாற்று அரசு அமைப்பதற்கான வாய்ப்புகளைப் பரிசீலிக்காமல், சிறுபான்மை அரசின் கோரிக்கையை ஏற்று தேர்தல் நடத்த குடியரசுத் தலைவர் உத்திரவிடவும் முடியாது. ஏனெனில் இச்சிறுபான்மை அரசு நாடாளுமன்றத்தில் வீழ்த்தப்படவும் இல்லை. இன்னொரு

படிப்பகம்

www.padippakam.com

(தலையங்கம் தொடர்ச்சி.....)

புறம் பெரிய கட்சியான காங்கிரசு தான் அரசு அமைக்க முன்வருவதாகவும் அறிவிக்கவில்லை. இந்நிலையில் பட்ஜெட்டை நிறைவேற்ற காங்கிரசு ஒத்துழைக்குமா என்பதும் கேள்விக்குறியாக இருந்தது. நாட்டின் நலன் கருதி எதிர்க்கட்சிகள் இந்த பட்ஜெட்டுக்கு நம்பிக்கை வாக்கு அளிக்குமா என்பதும் சந்தேகமாகவே இருந்தது. மொத்தத்தில் நாடாளுமன்ற அரசியல் அமைப்பே நெருக்கடியில் சிக்கிக் கொண்டது.

### காங்கிரசின் புரோக்கராக வெங்கட்ராமன்

இந்த நெருக்கடிக்கு காங்கிரசும் சந்திரசேகர் கட்சியும்தான் காரணம் என்றாலும், நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் தன் பங்குக்கு புதிய நெருக்கடியை ஏற்படுத்தினார். பட்ஜெட்டும் நிறைவேற வேண்டும்; காங்கிரசையும் பதவியில் அமர்த்த வேண்டும் என்ற திட்டத்துடன் அவர் வெளிப்படையாகவே காங்கிரசின் புரோக்கராகச் செயல்பட்டார். நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை அறிவிக்க மறுத்து ரகசிய பேரங்கள், கூட்டுக்கள் மூலம் மீண்டும் காங்கிரசை அல்லது அதற்குச் சாதகமான அரசை ஆட்சியில் அமர்த்துவதற்கான கீழ்த்தரமான முயற்சியில் இறங்கினார்.

நாட்டின் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளபோது தேர்தலை தள்ளி வைக்க அரசியல் சாசனப்படி குடியரசுத்



தலைவருக்கு உரிமை உள்ளதாக காங்கிரசு இதை நியாயப்படுத்தியது. அரசியல் சட்ட நிபுணர்களிடம் தீவிர ஆலோசனை என்ற பெயரில் காலத்தை நீட்டித்து, காங்கிரசுக் கட்சி புதிய பேரங்களில் இறங்குவதற்கான வாய்ப்பை அவர் இதன் மூலம் உருவாக்கிக் கொடுத்தார். கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட 'மாண்புமிக்க முதல் குடிமக'னான குடியரசுத் தலைவரின் மாளிகை அரசியல் சதியாலோசனைக்கான அரங்கமாக மாற்றப்பட்டதை எதிர்த்து எதிர்க்கட்சிகளும் அதன் பத்திரிக்கைகளும் கூப்பாடு போட்டன. நாடாளுமன்றத்தைக் கலைத்து உடனடியாக தேர்தலை அறிவிக்காவிட்டால் தமது கட்சி எம்.பி.க்கள் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்யப் போவதாக ஜனதாதளம் மிரட்டியது. இது நாட்டின் தலைமகனான குடியரசுத் தலைவரை மிரட்டிப் பணிய வைக்கும் முயற்சி என்று காங்கிரசு எதிர்கூச்சல் போட்டது. அரசியல் சதிகளில் இறங்கிவிட்ட குடியரசுத் தலைவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கண்டனத் தீர்மானம் கொண்டுவரக் கோரி தி.மு.க. கூப்பாடு போட்டது.

இவ்வளவுக்குப் பிறகும் குடியரசுத் தலைவர் அசைந்து கொடுக்கவில்லை. சுப்பிரமணியசாமி, தேவிலால் முதலானோரைக் கொண்டு சந்திரசேகர் கட்சியைப் பிளந்து, அவரைக் கட்சியிலிருந்து நீக்கிவிட்டு தேவிலாலைப் பிரதமராக்கி காங்கிரசு ஆதரவுடன் ஆட்சியைத் தொடருவது; அல்லது காங்கிரசும் சந்திரசேகர் கட்சியும் சமரசத்துக்கு வந்து இருவரும் சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைப்பது — என்பதாக காங்கிரசின் எல்லாவகை முயற்சிகளும் பேரங்களும் முறிந்த பின்னரே அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த உத்திரவிட்டார்.

### எதிர்க்கட்சிகளின் சந்தர்ப்பவாத பல்டி

வரப்போகும் தேர்தலில் இந்நெருக்கடிக்குக் காரணமான காங்கிரசை அம்பலப்படுத்தி வீழ்த்தத் தீர்மானித்திருந்த எதிர்க்கட்சிகள், இந்நெருக்கடிக்கு இவர்களும் ஒரு காரணம் என்ற பழி தம்மீது விழாதிருக்கவும், நாட்டின் நலன் கருதியும் நாடாளுமன்ற

# உளவு விவகாரம்: யார் குற்றவாளி?

தனது வீட்டை உளவு பார்த்ததாக ராஜீவ் கும்பல் கிளப்பிய கூச்சல், அதன் மலிவான அரசியலை நாட்டுக்கு உணர்த்தி விட்டது.

அரியானா மாநில ரகசிய போலீசார் பாதுகாப்புப் பணிகளுக்காக டெல்லிக்கு வந்து செல்வது உண்டு. இது மத்திய உளவு நிறுவனத்துக்கும் டெல்லி போலீசாருக்கும் தெரிந்ததுதான். மேலும் உளவு பார்த்ததாகக் கூறப்படும் இரு அரியானா போலீஸ்காரர்களும் ராஜீவ் வீட்டின் பின்புற வாயிலின் எதிரே உள்ள டீக்கடைக்கு வந்து செல்வது வழக்கம்தான் என்று டெல்லி போலீசார் கூறுகின்றனர். இந்த நடைமுறை நீண்ட நாட்களாக இருக்கும்போது, திடீரென புரளி கிளப்பி சந்திரசேகர் அரசை மிரட்டிப் பணிய வைக்கவே இந்த விவகாரத்தை ராஜீவ் கும்பல் கிளப்பியது.

உண்மையில் இது மத்திய உளவுத் துறையின் மூலம் நடத்தப்பட்ட நாடகம் தான் என்று இப்போது மெதுவாக கசிந்துள்ளது. உளவுத்துறையின் தலைவரான எம்.கே.நாராயணன் இந்திரா - ராஜீவ் பரம்பரையின் நீண்டகால விசுவாசி. சந்திரசேகர் அரசுக்கு புதிய நிர்ப்பந்தம் கொடுப்பதற்காக அவரது ஏற்பாட்டின்படியே இந்த நாடகம் நடத்தப்பட்டுள்ளது.

மேலும், ஒட்டுக் கேட்பதும் உளவு பார்ப்பதும் எல்லா ஆட்சிகளிலும் நடக்கும் விவகாரம்தான். நாட்டை ஆண்ட ராஜீவுக்கு இது தெரியாததல்ல. இன்னும் சொல்லப் போனால் இது இந்திரா - ராஜீவ் கும்பல் பரம்பரையாக செய்துவரும் வேலைதான். இதற்காகவே மத்திய உளவுப் படையின் பல பிரிவுகள் விரிவாக்கப்பட்டு ராஜீவ் கும்பலின் விசுவாச வேட்டை நாய்களாகச் செயல்பட்டு வருகின்றன.

இந்திராவின் அவசரநிலை பாசிச ஆட்சியின் போது ஜெயப்பிரகாஷ் நாராயணன், காமராஜர் முதலான தலைவர்களின் வீடுகள் உளவுப்படையினரால் ரகசியமாக கண்காணிக்கப்பட்டன. ராஜீவ் ஆட்சிக் காலத்தில் எம்.ஜி.ஆர்; ஜெயலலிதாவின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டன. டெலிபோனும் ஒட்டுக் கேட்கப்பட்டது. இன்னும், தனது கட்சிப் பிரமுகர்களின் வீடுகளைக் கூட உளவுத்துறையின் மூலம் வேவு பார்த்தார் ராஜீவ். தமது கட்சியினர் மட்டுமின்றி, எதிர்க்கட்சித் தலைவர்களின் டெலிபோன்களும் அவரது ஆட்சியில் ஒட்டுக் கேட்கப்பட்டன. அவர்களது கடிதங்களும் உடைத்துப் பார்க்கப்பட்டன. இது பற்றிய விசாரணை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், எதிர்க்கட்சிகள் அதை வெளியிடக் கோரிய போது 'நாட்டின் நலன் கருதி' சந்திரசேகர் அரசு அதை வெளியிட மறுத்துவிட்டது.

அதே சமயம், ஒட்டுக்கேட்கும் உளவு பார்க்கும் நடைமுறையை ஒழிப்பதில் எதிர்க்கட்சிகளுக்கு எள்ளளவும் அக்கறை கிடையாது. தாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னரும் கூட இச்சட்டத்தையும், ராஜீவ் - இந்திரா கும்பல் துவக்கிவைத்த நடைமுறையையும் அவர்கள் ரத்து செய்யவில்லை. மாறாக, ராஜீவைப் போலவே தமது அரசியல் எதிரிகளை பழிவாங்கவும் முடக்கி வைக்கவும் ஒட்டுக் கேட்பதையும் உளவு பார்ப்பதையும் தொடரவே செய்கின்றனர்.

அரசு எந்திரம் பூதாகரமானதாகவும், உளவு நிறுவனங்கள் நவீன முறையில் வளர்ந்தும் உள்ள இன்றைய நிலையில், இரு போலீஸ்காரர்கள் தனது வீட்டின் அருகே நடமாடியதைக் காட்டி உளவு பார்த்ததாக ராஜீவ் கும்பல் பசப்புவது மிக அற்பத்தனமானது. ஆனாலும் இதை சாதாரண விஷயமாகக் கருத முடியாது என்கிறது காங்கிரசு. உண்மை தான்! அன்று இந்திராவை இரண்டு போலீசுக்காரர்கள்தான் சுட்டுக் கொன்றார்கள். இன்று சந்திரசேகர் அரசு கவிழ இரண்டு போலீசுக்காரர்கள் முக்கிய காரணமாகிவிட்டார்கள். சாதாரண விஷயமா இது?



படிப்பகம்

www.padippakam.com

அமைப்பின் புனிதத்தைக் காக்கவும் ஒரு உடன்பாட்டுக்கு வந்தன. அதன்படி, இடைக்கால பட்ஜெட்டுக்கு நம்பிக்கை வாக்களித்து நிறைவேற்றிவிட்டு, குடியரசுத் தலைவரிடம் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்துமாறு கோருவது என்று தீர்மானித்தன. தமது வியாபாரம் இன்று போணியாக விட்டாலும் நாளை பார்த்துக் கொள்ளலாம்; ஆனால் கடையே போய் விட்டால் என்ன செய்வது என்ற பீதியில் நாடாளுமன்ற மாண்பைக் கட்டிக் காப்பது என்ற பெயரில் வெட்கமின்றி சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டன.

இதே எதிர்க்கட்சிகள்தான் நேற்று வரை, முழுமையான பட்ஜெட்டாக இல்லாமல் இடைக்கால பட்ஜெட் கொண்டு வந்ததற்கும், விலையேற்றத்தை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்களை நடத்தின. நாடாளுமன்றத்தில் கூட்டாக இந்த பட்ஜெட்டை எதிர்ப்பது என்றும் தீர்மானித்திருந்தன. அத்தனையும் ஒரே நொடியில் புறந் தள்ளிவிட்டு கொள்கை - லட்சியம் ஏதுமின்றி இந்த இடைக்கால பட்ஜெட்டுக்கு நம்பிக்கை வாக்களித்து நிறைவேற்றினர். சந்தடி சாக்கில், ஓராண்டுக்கு மேல் பதவி வகிக்கும் எம்.பி.க்களுக்கு கூடுதல் சம்பளம், படிகள், பென்ஷன் முதலானவற்றை உயர்த்திக் கொள்வதற்கான மசோதாவை இப்பிழைப்புவாதிகள் வெட்கமின்றி நிறைவேற்றிக் கொண்டனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் பஞ்சாப் - அசாமில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிக்க சட்டபூர்வ அங்கீகாரம் இல்லாமல் போய்விடும் என்று இக்கூட்டத் தொடரில் அவசரமாக கொண்டு வரப்பட்ட மசோதாவை எதிர்த்து, பஞ்சாபில் தேர்தல் நடத்தக் கோரி போலிக் கம்யூனிஸ்டுகளும் ஜனதா தளமும் வெளிநடப்பு செய்தன. ஆனால், அதேசமயம் அசாமில் குடியரசுத் தலைவர் ஆட்சியை நீட்டிப்பதை அங்கீகரித்தன. கடைசியில் ஐ.எம்.எஃப் விதித்த நிபந்தனைகளை ஏற்று மக்களை ஒட்டச் சுரண்டவும், மேலும் வரிச்சுமைகளையும் விலையேற்றத்தையும் திணிக்கவும் சட்டபூர்வ ஒப்புதல் கோரும் இந்த பட்ஜெட்டையும், காஷ்மீர் பஞ்சாப் - அசாம் மாநிலங்களில் அரசு பயங்கரவாதத்தைத் தொடர்ந்து நீட்டிக்கவும், நாடாளுமன்ற அமைப்பின் புனிதத்தைக் காப்பது என்ற பெயரில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஆதரிக்கவே செய்தன.

## அழுகி நாறுவது இந்தியாவில் மட்டுமா?

ஆக, நாட்டின் நலன், நாடாளுமன்ற அமைப்பைக் காப்பது என்ற பெயரில் ஏதாவது சிக்கல் வந்தால் கொள்கை - லட்சியத்தைக் கைவிட்டு எல்லா ஓட்டுக்கட்சிகளும் வெட்கமின்றி கூட்டுச் சேர்ந்து மக்களை ஏய்க்க தயாராகவே உள்ளன. இப்படி நடப்பது வரலாற்றில் புதியதல்ல; ஏற்கனவே நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தொட்டிலான இங்கிலாந்திலேயே கூட சிறுபான்மை அரசு கவிழ்ந்து, நம்பிக்கை வாக்கின் அடிப்படையில் பட்ஜெட் நிறைவேறி நாடாளுமன்ற மாண்பு காப்பாற்றப்பட்டுள்ளது என்று முதலாளித்துவ சித்தாந்தவாதிகள் ஆறுதல் கூறுகின்றனர்.



ராஜீவுடன் வெங்கட்ராமன்: ஜனாதிபதியா? அரசியல் சதிகாரரா?

1945 விருந்து '72க்குள் இங்கிலாந்தில் 34 முறை அரசுகள் கவிழ்ந்த போதிலும் அதன் பட்ஜெட் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன் நிறைவேற்றப் பட்டுள்ளது. அதேபோல பல முறை சிறுபான்மை அரசின் பட்ஜெட்டும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. 1910-ல் ஒரே ஆண்டில் இங்கிலாந்து நாடாளுமன்றம் இரண்டுமுறை கலைக்கப்பட்டது. 1974-லும் அதே போல நடந்தது. முன்னாள் பிரதமர் உட்ரோவில்சன் பதவிக்கு வந்த 8 மாதத்திற்குள் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தக் கோரினார். இதே போல ஆஸ்திரேலியாவிலும் நடந்துள்ளது. எனவே இப்புதிய நெருக்கடியினால் அதிர்ச்சியோ ஆத்திரமோ அடையத் தேவையில்லை. நெருக்கடிக்கான காரணம் நாடாளுமன்ற அரசியல் அமைப்பில் இல்லை. அரசியல் கட்சிகளின் அராஜகத்தால்தான் இந்த நிலைமை ஏற்படுகிறது. கணவன் மனைவிக்கிடையே ஊடலும் கூடலும் இருப்பதைப் போல, நாடாளுமன்ற அமைப்புக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையே உரசல் இருந்தாலும் அவை நாளை இணக்கமாகிவிடும். எனவே நாடாளுமன்ற அமைப்பின் மீது அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை - என்று அவர்கள் உபதேசிக்கின்றனர்.

## தேர்தல்களால் நெருக்கடி தீராது

இன்றைய அரசியல் நெருக்கடிக்கும், பலவீனமான நிலையற்ற ஆட்சிக்கும் முற்றுப்புள்ளி வைக்க தேர்தல் உதவும் என்று ஓட்டுக் கட்சிகள் மாய்மாலம் செய்கின்றன. இன்றைய நெருக்கடிக்கு ஓட்டுக் கட்சிகள் மட்டும் காரணமல்ல; நாடாளுமன்ற அரசியல் அமைப்பே நெருக்கடியில் சிக்கிக் கொண்டுவிட்டது. கட்சிமாறிகள், பதவி வெறியர்கள், கிரிமினல் - மாஃபியா கூட்டாளிகளான சந்திரசேகர் கும்பலை விட்டால் இந்த அமைப்பில் ஆட்சி நடத்த வேறு நாதியில்லை என்பதைத் தானே அது நிரூபித்துள்ளது. ஒருபுறம் பாசிச ராஜீவ் கும்பல்; மறுபுறம் சாதியத் தலைவர்கள், பதவி வெறியர்கள், கிரிமினல் - பொறுக்கி அரசியல்வாதிகளைக் கொண்ட ஜனதாதளம் - தேசிய முன்னணி; இன்னொருபுறம் இந்து வெறி பாசிச ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதா; மற்றொரு புறம் சந்தர்ப்பவாதக் கூட்டுக்களுக்காக காத்திருக்கும் போலிக் கம்யூனிஸ்டுகளின் இடதுசாரிக் கூட்டணி. இத்தகைய பாசிச, பதவி வெறி, மதவெறி, சந்தர்ப்பவாத சக்திகளை மட்டுமே உருவாக்கக் கூடியதுதான் இந்த நாடாளுமன்ற அமைப்பு என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

எனவே தேர்தல் நடத்தி, இத்தகைய மக்கள் விரோத சக்திகளில் யாரையாவது வைத்து, எப்படியாவது நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பைக் காத்திட வேண்டும் என்ற இந்தத் தீர்வு நாட்டுக்கும் மக்களுக்கும் உதவாது. வரப்போகும் புதிய ஆட்சியினால் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடியாது. மீண்டும் அது தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் சுரண்டல், அடக்குமுறை நீடிப்பதற்கே உதவும். எனவே இவர்களோடு சேர்த்து நாடாளுமன்ற போலி ஜனநாயக ஆட்சிமுறையையே தூக்கியெறிய வேண்டும். புரட்சிகரமான அமைப்புகளை நிறுவி புதிய ஜனநாயகத்தை நிறுவுவதற்கான போராட்டத்தைத் தொடர வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

## வங்கதேச தேர்தல்கள்

# பிறவி ஊனம்

**கூட்டணி ஆட்சி, பேரங்கள், கட்சித் தாவல் என்கிற நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அந்திமக் கால அராஜகத்தை இப்போதே அது நெருங்கி விட்டது.**

இராணுவ சர்வாதிகாரி எர்ஷாத்தின் 9 ஆண்டு கால கொடுங்கோலாட்சிக்கு எதிரான மக்களது பேரெழுச்சியைத் தொடர்ந்து வங்க தேசத்தில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடந்து முடிந்துள்ளது. இராணுவ சர்வாதிகாரம் முடிவுக்கு வந்து நாடாளுமன்ற ஜனநாயகம் மலரப் போகிறது என்று எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாமல் 'தொங்குநிலை நாடாளுமன்ற' நிலையில் அது சிக்கிக் கொண்டுள்ளது. கூட்டணி ஆட்சி, பேரங்கள், கட்சித் தாவல் என்கிற நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அந்திமக் கால அராஜகத்தை இப்போதே அது நெருங்கிவிட்டது.

அதற்கு முன்னோடியாக கொள்கை - லட்சியம் ஏதுமின்றி இந்தத் தேர்தலே கவர்ச்சிவாத அடிப்படையில்தான் நடந்தது. மக்களது சர்வாதிகார எதிர்ப்பு சீற்றத்தை அறுவடை செய்து கொண்டு ஆட்சிக்கு வருவதிலேயே ஓட்டுக்கட்சிகள் குறியாக இருந்தன.

நடந்து முடிந்த இத்தேர்தலில், எர்ஷாத் கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் ராணுவ சர்வாதிகாரி ஜியாவுர் ரஹ்மானின் மனைவி கலீடா ஜியா தலைமையிலான வங்கதேச தேசியக் கட்சி ஒரு அணியாகவும், வங்க தேசத்தை நிறுவியவரும் இந்தியாவின் விசுவாசியும், ராணுவ கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டவருமான முஜிபுர் ரஹ்மானின் மகள் ஹசீனா வஜீத் தலைமையிலான அவாமி லீக் எதிர் அணியாகவும் நின்று 'ஜனநாயகத்தை' நிலை நாட்டுவதற்காக கடும் போட்டியில் இறங்கின. பாகிஸ்தானின் பெனாசிர், பிலிப்பைன்சின் அகினோவைப் போல ஜனநாயகத்தை மீட்க வந்த வீராங்கனைகளாக இவர்கள் சித்தரிக்கப்பட்டனர். ஆனால், சர்வாதிகாரத்துக்கு அடிப்படையாக உள்ள அரசியல் - பொருளாதார நெருக்கடியையும், அதற்குக் காரணமான ஏகாதிபத்திய சார்பையும் நிலப்பிரபுத்துவத்தையும் ஒழிப்பதைப் பற்றி இவர்கள் எந்தத் திட்டத்தையும் அறிவிக்கவில்லை. போலி ஜனநாயகத்தையும் ஏகாதிபத்திய சார்புக் கொள்கையையும் ஜனரஞ்சகமாகப் பேசி மக்களை மயக்கினர்.

நாட்டின் வறுமையைப் போக்க தனியார் துறையையும் அன்னிய முதலீட்டையும் பெருக்குவதுதான் ஒரே வழி என்றார் கலீடா ஜியா. ''அல்லாவின் வழியிலான ஆட்சி'' என்ற பெயரில் முஸ்லிம் அடிப்படைவாதத்தை ஆதரித்து அதன்மூலம் அரபு நாடுகளின் கடனையும் முதலீட்டையும் வரவேற்றார். அமெரிக்கப் பாணி ஜனாதிபதி ஆட்சி முறையே ஜனநாயகத்தை வலுப்படுத்தும் என்றார். அதன்படி தனது கணவரும் ராணுவ சர்வாதிகாரியுமான ஜியாவுர் ரஹ்மான் வகுத்த ஜனாதிபதி ஆட்சி முறைதான் நாட்டின் நெருக்கடியைத் தீர்க்க வல்லது என்றார். அதாவது, அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி கையில் குவித்து பாராளுமன்றத்தை வெறும் ஆலோசனை கூறும் அமைப்பாக்க வேண்டும் என்பதுதான் அவரது குறிக்கோள்.

இவரது எதிர்த்தரப்பான ஹசீனா, அன்னிய முதலீட்டுடன் அரசுத் துறையை வளர்த்து மதச் சார்பற்ற சோசலிச ஆட்சியை நிறுவுவதே தமது லட்சியம் என்றார். வங்க தேசத்தை நிறுவிய சில ஆண்டுகளுக்குள் நெருக்கடிகளைத் தீர்க்க முடியாமல் ஒரு கட்சி சர்வாதிகாரத்தை நிறுவிய தனது தந்தை முஜிபுர் ரஹ்மான் வகுத்த அரசியல் சட்டமும் நாடாளுமன்ற ஆட்சி முறையும் தான் சிறந்தது என்று வாதிட்டார். ஆக, இரு தரப்புமே ஜனநாயகம் என்ற பெயரில் சர்வாதிகாரத்தையே ஆதரித்தனர்.

எர்ஷாத்தின் சர்வாதிகாரத்தை எதிர்ப்பதாகக் கூறும் இவர்கள், எர்ஷாத் கட்டி வளர்த்துள்ள அதிகார வர்க்க ராணுவ சர்வாதிகார அரசு எந்திரத்தைத் தகர்ப்பதைப் பற்றி எந்த அறிவிப்பையும் இதுவரை செய்யவில்லை. ராணுவ சர்வாதிகாரத்திற்கு எதிராக பல்வேறு கலகங்களை நடத்தி பல ஆண்டுகளாக சிறையிடப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலையைப் பற்றி இவர்கள் வாயே திறக்கவில்லை. இப்போராட்டங்களை எர்ஷாத் கும்பல் ஒடுக்கியதைப் பற்றியோ, தேர்தலுக்கு முன் சிட்டகாங் மற்றும் பிற இடங்களில் நடந்த சிறைக் கலகங்களைப் பற்றியோ இவர்கள் கருத்து எதுவும் தெரிவிக்காமல் மௌனம் சாதித்தனர்.

பிரச்சாரம் சூடு பிடித்ததும், இருவருமே ஒருவரையொருவர் நீதான் இந்தியக் கைக்கூலி, தேசப்பற்று இல்லாதவர் என்று சாடிக் கொண்டனர். அதேபோல, நீதான் இராணுவத்தின் கைக்கூலி, ஊழல் பெருச்சாளி என்று வசைபாடிக் கொண்டனர். தேர்தல் நெருங்கியதும் இருவருமே இந்திய ஓட்டுக் கட்சிகள் பாணியில், இலவச மின்சாரம், விவசாயக் கடன் தள்ளுபடி என்று கவர்ச்சித் திட்ட வாக்குறுதிகளை அள்ளி வீசினர்.

இத்தேர்தலில் இந்தியாவின் விசுவாசியான ஹசீனாவின் அவாமி லீக் கூட்டணி வெற்றி பெறும் என்று இந்தியா பெரிதும் எதிர்பார்த்தது. கருத்துக் கணிப்பு மதிப்பீட்டிலும் ஹசீனாதான் முன்னணியில் இருந்தார். எர்ஷாத் ஆட்சி வீழ்ந்ததும், அதுவரை இந்தியாவில் தஞ்சம் புகுந்திருந்த முஜிபுர் ரஹ்மானின் வலதுகரமாகச் செயல்பட்டவரும், இந்திய உளவுப் படை ''ரா''வின் வளர்ப்புப் பிராணியுமான ''புலி'' சித்திக், ஹசீனாவை ஆதரித்து தேர்தல் வேலைக்காக வங்க தேசத்துக்குச் சென்றார். ஆனால், தேர்தல் முடிவுகள் வேறு விதமாக அமைந்து, அவாமி லீக் கூட்டணி தோல்வியடைந்து, இந்திய மேலாதிக்கவாதிகளுக்கு பலத்த அடியைக் கொடுத்துவிட்டது.

தெற்காசிய பிராந்தியத்தில் ஆதிக்க சக்தியாக வளர்ந்து நாட்டாண்மை செய்யும் இந்திய மேலாதிக்கத்துக்கு எதிரான வங்க தேச மக்களின் வெறுப்புணர்வைச் சாதகமாக்கிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கிய கலீடாவின் தேசியக் கட்சி மொத்தமுள்ள 300 தொகுதிகளில் 140 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளது. ஆட்சி அமைக்க அதற்கு இன்னும் 11 இடங்கள் தேவை. ஹசீனாவின் அவாமிலீக் கூட்டணி 84 தொகுதிகளில் வென்று இரண்டாவது நிலைக்குத் தள்ளப்பட்டது. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த சர்வாதிகாரி எர்ஷாத் தான் போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் வெற்றி பெற்றதோடு, அவரது கட்சி 35 தொகுதிகளில் வென்று மூன்றாவது இடத்தில் உள்ளது.

எனவே, ஜமாத் இ-இஸ்லாமி, சுயேச்சைகள் முதலான சிறிய கட்சிகளின் ஆதரவின்றி கலீடாவால் ஆட்சி அமைக்க முடியாது. அவரது ஆட்சியும் நீடிக்குமா என்பதும் சந்தேகம்தான். ஏனெனில், கலீடா ஏழு கட்சிக் கூட்டணிகளின் தலைவர். இதனால், அதிகாரப் போட்டி, கட்சித் தாவல், ஆட்சிக் கவிழ்ப்புக்கான அபாயம் எப்போதும் அவரைச் சூழ்ந்துள்ளது. இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்ட போதிலும் அவாமி லீக் கூட்டணி, கலீடா கட்சி பெற்ற அளவுக்குச் சமமாக வாக்குகளை பெற்று பலமாகவே உள்ளது. கலீடா கட்சி மயிரிழையில்தான் வெற்றி பெற்றுள்ளது. மேலும் எர்ஷாத் கும்பல் மீண்டும் ராணுவ ஆட்சியை நிறுவுவதற்கான தருணத்தை எதிர்பார்த்து நாக்கில் எச்சில் ஊற காத்துக் கொண்டிருக்கிறது. எனவே, கலீடாவால் நிலையான ஆட்சியைத் தர முடியுமா, நாடாளுமன்ற ஜனநாயகம் தொடர்ந்து நீடிக்குமா என்பதும் சந்தேகம்தான்.



ஹசீனா வஜீத்



படிப்பகம்

www.padippakam.com


கலீடா ஜியா

நாடாளுமன்ற ஜனநாயகம் திரிசங்கு நிலையில் சிக்கிக் கொண்டு, மீண்டும் சர்வாதிகாரத்துக்கான அபாயம் சூழ்ந்துள்ள நிலையில் கலீடாவும் ஹசீனாவும் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைத்து ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டும் முதலாளித்துவ சித்தாந்த வாதிகள் உபதேசிக்கின்றனர். அப்படியொரு கூட்டாட்சி ஏற்பட்டாலும் அது தற்காலிகத் தீர்வாகத்தான் இருக்க முடியும். ஏனெனில், ஆளும் வர்க்கங்களின் வெவ்வேறு பிரிவுகளை ஆதரிக்கும் இக்கூட்டணி விரைவிலேயே பிளவுபட்டு நாடாளுமன்ற அராஜகம் மேலும் தீவிரமாகவே செய்யும்.

உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்று வங்கதேசம். ஆண்டுதோறும் 3000 கோடி ரூபாய்க்கு அமெரிக்காவிடம் கையேந்தி நிற்கும் நாடு. பருவந்தோறும் புயல் - வெள்ளத்தால் அல்லற்படும் ஏழைகளைக் கொண்ட நாடு. தொடர்ச்சியான ராணுவ சர்வாதிகார ஆட்சிகளால் அந்நாட்டின் பொருளாதாரம் ஏற்கனவே சூறையாடப்பட்டு விட்டது. இந்நிலையில் எர்ஷாத் வீழ்த்தப்பட்ட போதிலும் வரப்போகும் புதிய ஆட்சியால் வங்கதேசத்தின் அரசியல் பொருளாதார நெருக்கடிகளை ஒருக்காலும் தீர்க்க முடியாது. சர்வாதிகாரத்துடன் சமரசம் செய்து கொள்வதன் மூலம் நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தைக் கூட நிலைநாட்ட முடியாது. ஏற்கனவே இந்தப் பாதையில் சென்று தோல்வியடைந்த பாகிஸ்தான் பெனாசிர் ஆட்சியின் அண்மைக்கால அனுபவம் கண்ணெதிரே உள்ளது. இனி வங்க தேச மக்களின் ஜனநாயகத்துக்கும் நல்வாழ்வுக்குமான ஆட்சி அமைவதாக இருந்தால், அது புரட்சியில் மலரும் புதிய ஜனநாயக அரசாக மட்டுமே இருக்க முடியும். ஏற்கனவே சர்வாதிகார எதிர்ப்புப் போராட்டத்தில் இறங்கி படிப்பினை பெற்றுள்ள வங்கதேச மக்கள், நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தையும் ராணுவ சர்வாதிகார அபாயத்தையும் புதைகுழிக்கு அனுப்பும் போராட்டத்தைத் தொடுப்பதன் மூலமே அதைச் சாதிக்க முடியும்.

● குமார்.

# பு.மா.இ.மு. தோழரின் துணிவு போலிகளின் அராஜகம்

திருச்சியில் செயல்பட்டு வந்த பகத்சிங் இளைஞர் முன்னணி, கடந்த 1ந் தேதி முதல் புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி (RSYF) என பெயர் மாற்றப்பட்டு செயல்படுகிறது. காந்தி மார்க்கெட் நெரிசல், கழிப்பிடம் மற்றும் சைக்கிள் நிறுத்தங்களில் கட்டணக் கொள்ளை போன்ற பிரச்சினைகளுக்கு எதிராகப் போராடி மக்களிடையே நன்மதிப்பை பெற்றது, பகத்சிங் இளைஞர் முன்னணி. இளைஞர்கள் மட்டுமல்ல மாணவர்களும் மக்கள் பிரச்சினைகளுக்காக போராட முன் வரவேண்டும் என்ற அடிப்படையில் RSYF என பெயர் மாற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக கடந்த 2.3.91 அன்று திருச்சியில் நடந்த இந்திய மாணவர் சங்க (SFI) மாநாட்டு வாயில் முன்பு RSYF-ன் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது. தனியொருவராக பிரசுரம் விநியோகித்துக் கொண்டிருந்த தோழர் தாஸிடம் SFI தலைமையைச் சேர்ந்தவர்கள் வந்து ''நீங்கள் கொடுக்கும் பிரசுரம் நாங்கள் கொடுப்பதாக நினைத்து எங்கள் மாணவர்கள் குழப்பமடைவார்கள்; எனவே, பிரசுரம் கொடுக்கக் கூடாது'' எனக் கூறினர். அதற்கு தோழர் ''RSYF என தெளிவாகவே எங்கள் அமைப்பின் பெயரை பிரசுரத்தில் அச்சிட்டிருக்கிறோம்; குழப்பமடைய வாய்ப்பே இல்லை'' என்று பதிலுரைத்தார்.

இருந்தும் அவர்கள் ஒத்துக்கொள்ள மறுத்து மீண்டும் வந்து தொல்லை கொடுக்கவே மாநாட்டு மண்டபத்தை விட்டு 30 அடி தள்ளி ரோட்டில் நின்று தோழர் பிரசுரம் கொடுத்தார். மீண்டும் வலிய வம்புக்கு வந்தனர். ''மாணவர்களை மட்டும் பார்த்து ஏன் நோட்டீஸ் தருகிறீர்? பொது மக்களிடமும் தர வேண்டியதுதானே'' என்றெல்லாம் வம்பளந்தனர். ''உங்கள் மாநாட்டில் நாங்கள் பிரசுரம் கொடுத்தால் சும்மா இருப்பீர்களா?'' என்று கேட்டனர். ''தாராளமாக வந்துகொடுங்கள். யாருடைய பிரச்சாரத்தையும் கேட்கக் கூடாது என அணிகளை நாங்கள் தடுப்பதில்லை. அவர்கள் அரசியல் மூடர்களாக இல்லாமல் பல்வேறு அமைப்புகளைப் பற்றியும் தெரிந்து கொள்வதையே விரும்புகிறோம்'' என்று கூறவே வாயடைத்துப் போனார்கள்.

அரசியல் ரீதியாக பேச திராணியற்ற SFI தலைமைகள் தோழரை கும்பலாக சேர்ந்து தாக்கினர். உடன் தோழர் தாஸ், சாலையின் குறுக்கே வாகனங்களை மறித்து நின்று SFI-ன் ரவுடித் தனத்தை அம்பலப்படுத்தி பேசத் தொடங்கினார். வாகனங்களில் வந்தவர்கள், பாதசாரிகள், அக்கம்பக்கத்து கடை வியாபாரிகள், ஊழியர்கள் என பலர் கூடிவிடவே SFI 'வீரர்கள்' மாநாட்டு மண்டபத்திற்குள் ஓடி ஒளிந்தனர்.

கூடியவர்கள் தோழரின் பிரச்சாரத்தைக் கேட்டு பிரசுரம் பெற்று ஆதரவளித்தோடு அதன்பின்னும் தைரியமாக பிரசுரத்தை முழுமையாக விநியோகித்ததைக் கண்டு பாராட்டினர்.

SFI -யின் ரௌடித்தனத்தைக் கண்டித்து கல்லூரி வாயில்களிலும் பேருந்துகளிலும் RSYF தோழர்கள் சுவரொட்டி ஒட்டினர்.

போலிக் கம்யூனிஸ்டுகள் தங்கள் மாணவர் அமைப்பு தலைமைகளுக்கு ரௌடியிசத்தைத் தவிர கற்றுத் தருவதற்கு வேறென்ன இருக்கிறது?

# சாராயத்துக்கு எதிராக இளைஞர்களின் போர்க்குணம்

'கோல் எடுத்தால் குரங்கும் ஆடும் என்பார்களே அது திருச்சியில் நடந்தது.

திருச்சி - காந்திபுரத்தில் கள்ளச்சாராய விற்பனை நீண்ட நாட்களாகவே உள்ளூர் நாட்டாண்மை மற்றும் போலீசின் ஆதரவுடன் நடந்து வந்தது. ஊர்மக்கள் உயர் போலீசு அதிகாரிகள் முதல் முதலமைச்சர் வரை நடவடிக்கை எடுக்கக் கோரி பலமுறை மனுகொடுத்தும் துளியும் பயன் இல்லை.

திருச்சி மக்கள் கலை இலக்கியக் கழகத்தினரும், காந்திபுரம் - சாக்ரடீஸ் நற்பணி இளஞ்சேனையினரும் இணைந்து இதற்கு ஒரு முடிவு கட்ட முற்பட்டனர். சாராய வியாபாரியை ஊரில் இனி விற்கக்கூடாது என எச்சரித்தனர். சாராய வியாபாரியோ விற்பனையை நிறுத்த மறுத்தான். எனவே சாராயக் கடையை உள்ளே புகுந்து அடித்து நொறுக்கினர்; சாராய 'கேன்'களை எடுத்து ரோட்டில் உடைத்தனர்.

மேலும் நாட்டாண்மையைப் பார்த்து ஊரில் சாராயம் விற்கக்கூடாது என 'தண்டோரா' போடும்படியும் பஞ்சாயத்தைக் கூட்டி தனக்கும் சாராய வியாபாரிக்கும் தொடர்பில்லை என அறிவிக்கும்படியும் கோரினர். வேறுவழியில்லாமல் ஒத்துக் கொண்ட நாட்டாண்மை, பஞ்சாயத்து கூட வேண்டிய நாளில் வெளியூருக்கு ஓடிவிட்டார். நாட்டாண்மைக்கும் சாராய வியாபாரிக்கும் உள்ள உறவை அம்பலப்படுத்தி ம.க.இ.க., தட்டிப் பிரச்சாரமும், தெருமுனைப் பிரச்சாரமும் நடத்தியது.

பின்னர் போலீசு நிலையத்திற்குச் சென்று முறையிட்டு உடனடியாக விசாரிக்க கோரினர்! இதற்குப் பின்னும் சும்மாயிருந்தால் தானும் அம்பலமாகி விடுவோம் என்ற பயத்தில் போலீசு விசாரித்தது. போலீசு நிலையத்தில் ஊர் நாட்டாண்மைக்காரர்கள் ஊரில் சாராயம் விற்க இனி அனுமதிக்க மாட்டோம் என்று ஒத்துக் கொண்டனர். சாராய வியாபாரியும் இனி விற்கமாட்டேன் என எழுதிக் கொடுத்தான்.

இப்போராட்டத்தில் சாக்ரடீஸ் இளஞ்சேனையினர் போர்க்குணத்துடன் செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. பகுதிமக்கள் இந்நடவடிக்கையை வெகுவாகப் பாராட்டினர்.

தகவல்: ம.க.இ.க. திருச்சி.




படிப்பகம்

www.padippakam.com



**ஈழப்போராளிகளை உலகின் முகத்தில் இருந்து துடைத்தெறிவேன் என்று கொக்கரித்தான் ரஞ்சன் விஜியரத்னே. ஆனால், இதுதான் அவன் உடல் என்று அடையாளங்கூட காணமுடியாத அளவுக்கு வெந்து கருகிய ஏதோ சதையும் எலும்புகளையும் திரட்டி சவப்பெட்டிக்குள்ளே வைத்துப் புதைக்கப்பட்டான்.**



# தகுதியான தண்டனை

## செய்தவர்கள் யாரானாலும் வரவேற்க வேண்டிய புரட்சிகரப் பயங்கரவாதச் செயல்தான்

ரஞ்சன் விஜியரத்னே, சிங்கள இனவெறி பாசிச பயங்கரவாதத்தின் சின்னம்; இலங்கையின் பிணந்தின்னும் கசாப்புக்காரன் - இராணுவ மந்திரி அவனுக்கே தகுதியான, பொருத்தமான வழிமுறையில் கொழும்பு நகரில் கடந்தவாரம் அழித்தொழிக்கப்பட்டான்.

ஈழப் போராளிகளை உலகின் முகத்தில் இருந்து துடைத்தெறிவேன் என்று கொக்கரித்தான் ரஞ்சன் விஜியரத்னே. இதுதான் அவன் உடல் என்று அடையாளம் காண முடியாத அளவுக்கு வெந்து கருகிய ஏதோ சதையும் எலும்புகளையும் திரட்டி சவப்பெட்டிக்குள்ளே வைத்துப் புதைக்கப்பட்டான்.

குரூரமான வக்கிரமான கொலைவெறிதான் ரஞ்சன் விஜியரத்னேயின் தனிச்சிறப்பு!

— ஐக்கிய தேசியக் கட்சியின் பாசிசக் குண்டர்கள், சிங்கள இராணுவ - போலீசு வெறிநாய்கள், இனவெறிபிடித்த கிரிமினல் குற்றவாளிகள் ஆகியோரைக் கொண்டு இரகசியக் கொலைக் குழுக்களைக் கட்டினான்.

— மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்ற குட்டி முதலாளிய புரட்சிக் குழுவின் அணிகள் மட்டுமல்ல, ''சந்தேகத்துக்குரிய'' மாணவர்கள் - இளைஞர்களை நரவேட்டையாடினான்.

— ஜே.வி.பி.போராளிகள் எனச் சந்தேகிக்கப்படும் எவரையும் சுட்டுக்கொன்று அங்கேயே எரித்துவிடும் அதிகாரத்தைப் போலீசாருக்கு வழங்கினான். தென்னிலங்கை முழுவதும் எரியும் பிணங்களின் வாடை வீசியது.

— நிராயுத பாணிகளாகக் கைது செய்யப்பட்ட ஜே.வி.பி.யின் தலைவர்கள் அனைவரையும், 'போலீசுடன் மோதல்' என்கிற பெயரில் படுகொலை செய்து, பிணங்களைக் கூடக் காட்டாது எரித்துவிட்டான்.

— மலையகத் தோட்டங்களின் தொழிற்சங்க முன்னோடிகள் பலர் மீது இரகசியக் கொலைக் குழுக்களை ஏவிக் கடத்திக் கொன்றான்.

— மேற்கண்ட முறைகளில் ரஞ்சன் விஜியரத்னேயின் நேரடி உத்திரவு - கண்காணிப்பில் ஒரு லட்சம் பேரை ஓராண்டில் படுகொலை செய்தான் காணாமற்போன இளைஞர்கள் மட்டும் அறுபதாயிரம் பேரென சர்வதேச மனித உரிமை அமைப்பு கூறுகிறது.

— ஈழப் போராளிகளுடன் சமரசம், பேச்சு வார்த்தைக்கு இடமில்லை. இராணுவ ரீதியில்தான் தீர்வெனக் கூறி, யாழ், மன்னார் போன்ற நகரங்களில் வாழும் இடங்கள் மீது விமானங்களை ஏவிக் குண்டுமாரி பொழிந்தான்.

இப்படிப்பட்ட அரசு - பாசிச பயங்கரவாதத்துக்குத் தலைமை ஏற்ற ரஞ்சன் விஜியரத்னே, புரட்சிகர பயங்கரவாதத்துக்கு இறுதியில் பலியானான். அவனது மாளிகையில் இருந்து சிறப்புப் பணிப்படையினர் புடைசூழ, கடந்த மார்ச்சு 2ந் தேதி காலை அலுவலகத்துக்குக் கிளம்பினான். சாலையோரம் நிறுத்தி வைக்கப்பட்ட வெடிமருந்து நிரப்



படிப்பகம்

www.padippakam.com

பிய கார் வெடித்ததில் குண்டு துளைக்க முடியாத சொகுசுக்காரும், படையினரது இரண்டு கார்களும், சாலை வழியே போன இரு பேருந்துகளும் வெடித்துச் சிதறின.

பிணங்களைத் தந்திக் கம்பத்தில் தொங்கவிட்டவனது சதை, காரின் கதவுகளை எகிறிப்போய் அவ்வாறே தொங்கியது. ரஞ்சன் விஜியரத்னேயும், படையினரும் உட்பட 30க்கு மேற்பட்டோர் வெந்து கருகிப் போயினர். வீடுகள், கடைகளும் நாசமடைந்தன. பல மைல்களுக்கு வெடியோசை கேட்டது; தீப்பிழம்பும் தெரிந்தன; பூமி அதிர்ந்தது; வாகனங்கள் பலவும் பலமணிநேரம் எரிந்தன.

''அந்தப் பகுதியே கோரமான காட்சியாக இருக்கிறது; பார்ப்பதற்கு விமானத் தாக்குதலால் நாசமாக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைப் போலிருக்கிறது'' என்றொருவர் வருணிக்கிறார். தகுந்த பதிலடிதானென்று தெரிகிறது.

ரஞ்சன் விஜியரத்னேயை அழித்தொழித்து, பழி தீர்த்துக் கொள்வதற்கு ஜே.வி.பி. இரண்டு முறை முயன்று தோற்றுப் போனது, இந்தச் சம்பவத்துக்கு ஜே.வி.பி.யும் உரிமை பாராட்டவில்லை. தாம் செய்யவில்லை எனப் புலிகளும் மறுத்துவிட்டனர். ஒருவேளை, எதிர்த்தாக்குதலைத் தவிர்ப்பதற்காக இவ்வமைப்புகள் இவ்வாறு செய்திருக்கலாம்.

இருந்தாலும், ரஞ்சன் விஜியரத்னேயின் சாவுக்கு பழிதீர்க்கும் முகமாக மூன்றாம் நாளே ஈழ மக்கள் மீது விமானக் குண்டு வீச்சில் இறங்கியது பாசிச பிரேமதாசா அரசு. ரஞ்சன் விஜியரத்னேயின் சாவு உண்மையில் அதற்கு பேரிழப்புதான். அவனது பாசிச, பயங்கரவாதக் கொள்கைகள் காரணமாக அடுத்த இலங்கை அதிபராவதற்கு எண்ணியிருந்தான். 'சாவுக்குப் பிந்திய இராணுவத் தளபதி' பட்டமளித்து பிரேமதாசாவும் அவனைக் கௌரவித்துள்ளார்.

ரஞ்சன் விஜியரத்னேயின் சாவு ஈழத் தமிழருக்குச் சற்று ஆறுதலாகவும், புலிகளுக்கு இராணுவ - அரசியல் ரீதியில் சாதகமானதாகவும் இருக்கலாம். ஆனால், ஈழ விடுதலை இயக்கமும், ஈழத் தமிழரும் சந்திக்கும் பிரச்சினைகள் எதிலும் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் ஈழத்திலிருந்து வெளியேறி ஓராண்டாகப் போகிறது. அந்தச் சமயத்தில் ஈழப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை - சமாதானத் தீர்வு ஏற்படுவதாகத் தோன்றியது. ஆனால், பிரேமதாசா அரசுடன் புலிகள் நடத்தி வந்த இரகசிய பேரம் முறிந்து போனதால், ஈழத்தில் மீண்டும் போர் துவங்கியது.

கிழக்கு மாகாணத்தை சிங்கள இராணுவம் பெரும்பாலும் மீட்டுக் கொண்டது; வடக்கிலே நகரங்கள் மீது குண்டு வீசியும், பொருளாதாரத் தடை விதித்தும் ஆயிரக் கணக்கானோரைக் கொன்று வருகிறது. இலட்சக் கணக்கானோர் இலங்கையிலும், இந்தியாவிலும் அகதிகளாக வதைகின்றனர்.

யாழ்க் கோட்டை உட்பட வடக்கிலுள்ள சிங்கள இராணுவ முகாம்கள் சிலவற்றைத் தாக்கி அழிப்பதில் புலிகள் வெற்றி பெற்றனர்; ஆனாலும் புலிகளது பாசிசப் போக்கில் மாற்றம் ஏற்படாததால், மக்களிடமிருந்து கணிசமான அளவு ஆதரவை இழந்தனர். தமது சொந்தக் குழு நலன்களை முன்னிறுத்தி மக்கள் தேவைகளை முற்றாகப் புறக்கணிப்பது; கட்டாய வரிவசூல், மாற்றுக் குழுவினரெனச் சந்தேகிப்போரை சிறைப்பிடித்துக் கொல்வது; மாற்று இயக்கங்களைத் தடை செய்வதும் அதிகரித்துள்ளது.



அரசு பயங்கரவாதம்; சிங்கள இளைஞர் பலி

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போதும், அதற்கு முன்னும் ஈழ முஸ்லீம் அமைப்புகளுடன் புலிகள் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தை முறித்து, இருபிரிவினரையும் மோதவிட்டு அழிப்பதில் ரஞ்சன் விஜியரத்னே பிரேமதாசாவின் சூழ்ச்சிக்கு குறுகிய தேசிய வெறி - பாசிசத் தன்மை காரணமாக புலிகளும், மதவாதத் தலைமையின் காரணமாக முஸ்லீம் அமைப்புகளும் பலியாகினர். வடக்கில் இருந்து வெளியேறும்படி முஸ்லீம் மக்களுக்குக் கெடு வைத்து புலிகள் தாக்குகின்றனர். கிழக்கிலுள்ள தமிழர்களை முஸ்லீம் மதவாதிகள் தாக்குகின்றனர்.

ஆக, சிங்கள இராணுவத்துக்கு எதிரான போரைப் புலிகள் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தபோதும், ஈழ விடுதலை இயக்கம் சரியான திசையில் முன்னேறுவதாகக் கூற முடியாது. மற்ற பிற ''பெரிய'' குழுக்கள் துரோகிகளாகி எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு ஈழ மக்களைக் காட்டிக் கொடுக்கின்றன; இதே நிலைக்கு ஈரோஸ் அமைப்பின் ஒரு பிரிவைப் புலிகள் தள்ளிவிட்டனர்; எஞ்சியிருந்த சிறு குழுக்களையும் புலிகள் வேட்டையாடுகின்றனர்; ஈழ மக்களும் தாமே முன் வந்து விடுதலைப் போருக்கு ஆதரவளிப்பது குறைந்து நிர்பந்தமே மேலோங்கி வருகிறது.


ஈழ விடுதலை இயக்கத்துக்குச் சரியான அரசியல் - சித்தாந்தத் தலைமையின்றி, அது குறுகிய தேசியவாத, பாசிச புலிகளின் பிடியில் சிக்கியிருப்பதாலேயே ரஞ்சன் விஜியரத்னே போன்ற பிணந்தின்னும் கசாப்புக்காரர்கள் அதை ஒடுக்குவதில் முன்னேற முடிகிறது. ஆகவே, இவ்வளவு பெரும் இழப்புகள், தியாகத்துக்குப் பிறகாவது, கடந்த காலத் தவறுகளில் இருந்து பாரிய படிப்பினைகள் பெற்று சரியான அரசியல் - சித்தாந்தத் தலைமையைத் துணிவுடன் நிறுவுவதற்கான போராட்டத்தை ஈழப் போராளிகள் முன்னெடுக்க வேண்டும்.

● மாணிக்கவாசகம்.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

குடியரசுத் தலைவர் வெங்கட்ராமனின் மகளான லட்சுமி வெங்கடேசன், ராஷ்டிரபதி பவன் முத்திரையையே ரகசியமாகப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டுள்ளார். பாரதீய யுவ சக்தி டிரஸ்ட் என்ற அமைப்புக்கு நிதியுதவி செய்யுமாறு ராஷ்டிரபதி பவன் முத்திரை பொறித்த சிபாரிசுக் கடிதங்கள் மூலம் பெரு முதலாளிகளிடமும் வெளிநாட்டிலுள்ள இந்திய பண முதலைகளிடமும் அவர் பெருமளவு நிதிதிரட்டியுள்ளார். இந்த அயோக்கியத் தனத்துக்கு வெங்கட்ராமனே உடந்தையாக இருந்துள்ளார். குடியரசுத் தலைவரின் மகள் இம்மோசடியின் மூலம் திரட்டிய நிதி எவ்வளவு என்பது இன்றுவரை வெளி வராமல் அமுக்கப்பட்டு விட்டது.

டிசம்பர் 91 முதலாக மருந்துப் பொருட்களைத் தயாரிக்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு கடன் வழங்கும் சலுகையை நிறுத்திவிட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. கடந்த 45 ஆண்டுகளாக உள்ள இந்த நடைமுறையை ரத்து செய்வதன் மூலம் லட்சக் கணக்கான தொழிலாளர்கள் வேலை இழப்பதோடு, 5000 சிறுதொழில் மருந்து உற்பத்தி நிறுவனங்களை மூடுவிழா செய்ய நேரிடும். மருந்து துறையை பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தில் முழுவதுமாக ஒப்படைக்கும் முயற்சியே இது.

துணைப் பிரதமர் தேவிலால் ஒரு அருங்காட்சியகம் வைக்குமளவுக்கு ஏராளமான பரிசுப் பொருட்களைக் குவித்துள்ளார். வெள்ளிக் கைத்தடி, வெள்ளிக்குடை, தங்க கடிகாரம், தங்கத்தாலான சட்டைப் பொத்தான், காசு மாலை; வெள்ளிச் செருப்பு, தங்க கிரீடம், வெள்ளிச் சரிகை போட்ட தலைப்பாகை, கைவினைப் பொருட்கள், தங்க கண்ணாடி என்று தனக்கு பரிசாக அளிக்கப்பட்ட பொருட்களை தனது மாளிகையில் ஒரு தனியறையில் போட்டு பூட்டி வைத்துள்ளார். மந்திரிகளுக்குத் தரப்படும் பரிசுப் பொருட்களை அரசு கருவூலத்திடம் ஒப்படைக்க வேண்டும். ஆனால், தான் பதவியில் இல்லாதபோது இவை தரப்பட்டதாக கூறிக் கொண்டு பலகோடி ரூபாய் மதிப்புடைய இப் பரிசுப் பொருட்களை தனதாக்கிக் கொண்டுள்ளார். நம்புங்கள்! இவர்தான் வறுமையில் உழலும் கோடிக் கணக்கான விவசாயிகளின் தலைவராம்!

உலகின் மிக நீளமான கால்வாய் பாசனத் திட்டம் என்ற பெருமையுடன் 32 ஆண்டுகளுக்கு முன்பு இந்திரா காந்தி கால்வாய் திட்டம் ராஜஸ்தானில் துவக்கப்பட்டது. ஏறத்தாழ 400 கி.மீ. நீளமுள்ள இத்திட்டம் நிதிப் பற்றாக்குறை காரணமாக இன்னும் முழுமையடையவில்லை. இடைப்பட்ட காலத்தில் ஏற்கனவே கட்டிய கால்வாய் பாலங்கள் தகர்ந்து விட்டன. இத்திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையில் பெரும் பகுதியை காண்டிராக்டர்கள் கோடிக்கணக்கில் சுருட்டி விட்டனர். தொடர்ந்து இதே அளவுக்கு அற்பநிதி ஒதுக்கப்பட்டால் இதை நிறைவேற்ற இன்னும் 25 ஆண்டு ஆகுமாம். பன்னாட்டு பகாசுர நிறுவனமான பெப்சி கோலா திட்டத்துக்கு உடனடி அங்கீகாரமளித்து நிதி ஒதுக்கும் அரசு, விவசாயத் திட்டங்கள் என்றால் அற்ப நிதி ஒதுக்கி அறவே புறக்கணிக்கிறது.



குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுப்பதை அநாகரிகமாகக் கருதும் கேடான பழக்கத்தை ஒழிக்கும் நோக்குடன், குழந்தை உணவு தயாரிக்கும் நிறுவனங்களின் விளம்பரங்களுக்கு ரேடியோ, தொலைக்காட்சியில் தடை விதிக்க வேண்டும் என்று 1986ல் ராஜீவ் ஆட்சிக் காலத்தில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டது. பின்னர் கிளாக்சோ, நெசில் முதலான பன்னாட்டுக் கம்பெனிகளின் நிர்ப்பந்தம் காரணமாக அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. உலக சுகாதார நிறுவனம் விதித்திருந்த சில கட்டுப்பாடுகளைக் கூட குழந்தை உணவு தயாரிக்கும் பன்னாட்டு கம்பெனிகளுக்குச் சாதமாக வி.பி.சிங் அரசு கடந்த ஆண்டு தளர்த்திவிட்டது. மீண்டும் கடந்த ஜனவரியில் சந்திரசேகர் ஆட்சியில் விளம்பரங்களைத் தடுக்கக் கோரும் மசோதா கொண்டுவரப்பட்டு, மீண்டும் பன்னாட்டுக் கம்பெனிகளின் நிர்ப்பந்தத்தால் கிடப்பில் போடப்பட்டு விட்டது. மக்கள் சேவை என்ற பெயரில் ஒட்டுப் பொறுக்கிகள் யாருக்குச் சேவை செய்கிறார்கள் என்பதை இந்த விவகாரம் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

பாகிஸ்தானை இஸ்லாமிய நாடு என்று சட்டபூர்வமாக அறிவிப்பதென அந்நாட்டுப் பிரதமர் நவாஸ் ஷெரீப் முடிவு செய்துள்ளார். இதற்கான மசோதா மேல் சபையில் நிறைவேற்றப்பட்ட போதிலும், பாராளுமன்றத்திலும் மக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்பு நிலவுகிறது. ''முஸ்லிம் அடிப்படை வாதச் சட்டம் பெண்களை மேலும் அடிமைப்படுத்தும். பலதார மண முறையையும், விவாகரத்தையும் மேலும் தீவிரப் படுத்தும்'' என்று முற்போக்கான முஸ்லீம்களும் பெண்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராடி வருகின்றனர். இம்மசோதாவை எதிர்த்து நவாஸ் மந்திரி சபையிலிருந்து ஒருவர் பதவி விலகியுள்ளார். ஆச்சரியம் என்னவென்றால், ஜனநாயகம் பேசும் எதிர்க்கட்சித் தலைவியான பெனாசிர் பூட்டோ இச்சட்டத்தை வரவேற்று சில திருத்தங்களை மட்டுமே கோரியுள்ளார்.

மத்தியப் பிரதேசத்திலுள்ள இந்தூரில் பம்பாய் பஜ்ஜார் எனும் பகுதியை முஸ்லிம்கள் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதாகக் குற்றம் சாட்டி பாரதீய ஜனதா அரசு கடந்த பிப்ரவரி 19ல் காட்டுமிராண்டித் தனமான அடக்கு முறையை ஏவியது.

கடந்த 45 ஆண்டுகளுக்கும் மேலாக அப்பகுதியில் வாழ்ந்து வரும் முஸ்லிம் குடியிருப்புகளை புல்டோசர் வைத்து இடித்துத் தள்ளியும் மக்களை விரட்டியடித்தும் போலீசு அட்டூழியம் செய்தது. ஆத்திரமடைந்த ஒரு பெண்மணி வீட்டு மாடியிலிருந்து அம்மிக் கல்லைத் தூக்கி ஒரு போலீசுக்காரர் மீது வீசியதில் அவர் மாண்டு போனார். உடனே வெறிபிடித்த போலீசு அப்பகுதியை சுற்றி வளைத்து மிருகத்தனமாகத் தாக்கியதில் நூற்றுக் கணக்கானோர் எலும்பு முறிந்து மருத்துவமனையில் கிடக்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



கடந்த ஆண்டில் பஞ்சாபில் 1600 பேரும் காஷ்மீரில் 2000 பேரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதானார்கள். ஆனால், அதைவிட அதிகமாக காந்தி பிறந்த குஜராத் மாநிலத்தில் 5000 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் அப்பாவி உழைக்கும் மக்கள்; குறிப்பாக முஸ்லிம்கள். தேர்தலின் போது பயங்கரவாத தடைச் சட்டத்தை முறைகேடாக பிரயோகிக்க மாட்டோம் என்று வாக்களித்த முதல்வர் சிமன்பாய் பட்டேல் இப்போது வகுப்புக் கலவரத்தை தடுக்கவே இந்த நடவடிக்கை என்கிறார்.

காஷ்மீரில் சுய நிர்ணய உரிமை கோரும் போராளிகளை வேட்டையாடுவதற்காக கொலைப் படைகளைக் கட்டியமைத்துள்ள அரசு பயங்கரவாதிகள், தமக்கு உதவியாக காஷ்மீரிலேயே சில ரகசிய உளவாளிகளையும், ஆள்காட்டிகளையும் கூலிக்கு அமர்த்திக் கொண்டுள்ளனர். ''மத்திய ரிசர்வ் போலீஸ் சி.ஐ.டி.கள்'' என்ற அடையாள அட்டையுடன் மாதம் 3000 ரூபாய் ஊதியம் தருவதாக ஆசை காட்டி சிலரை வேலைக்கு அமர்த்திக் கொண்டு போராளிகளையும் ஆதரவாளர்களையும் வேட்டையாடி வந்தனர். விழிப்படைந்த போராளிகள் இப்போது ஆள்காட்டிகளுக்கு எதிரான இயக்கத்தை மேற்கொண்டு அவர்களை அழித்தொழித்து வருகின்றனர். உயிருக்கு அஞ்சிய பல கைக்கூலிகள் இப்போது காஷ்மீரை விட்டு டெல்லிக்கு அகதிகளாக ஓடிவந்து கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பியதை எதிர்த்து பெருங்கூச்சல் போட்டது காங்கிரசு. ஆனால், ராஜீவின் ஆத்தாவே இந்த அயோக்கியத்தனத்தை வியட்நாம் யுத்தத்தின் போது செய்துள்ளார். 1960களின் மத்தியில் பாசிச இந்திரா பிரதமராக இருந்தபோது, வியட்நாம் போரில் ஈடுபட்ட அமெரிக்கப் போர் விமானங்களுக்கு கொச்சி துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பிக் கொள்ள ரகசியமாக அனுமதியளித்துள்ளார் என்ற செய்தி இப்போது மெதுவாக கசிந்து வெளியே வந்துள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்பு வேடம் போடும் காங்கிரசின் யோக்கியதை இப்போது புரிகிறதல்லாவா?

கேரளாவின் தொலைக்காட்சி நிலையம் வளைகுடாப் போரைப் பற்றிய நிகழ்ச்சியில் அமெரிக்காவை ஆதரிக்கும் வகையில் செய்திகளைத் தொடர்ந்து ஒளிபரப்பி வந்தது. குவைத் நாட்டிலிருந்து திரும்பி வந்துள்ள கேரள மக்களைத் திருப்தி படுத்தவே இவ்வாறு திட்டமிட்டு ஒளிபரப்பி வந்தது. இதை எதிர்த்து பல்வேறு புரட்சிகர - ஜனநாயக சக்திகள் போராடியும்கூட தொலைக்காட்சி நிலையம் இதை நிறுத்தாத நிலையில், 'யுவ ஜனவேதி' எனும் மார்க்சிய - லெனினிய புரட்சிகர இளைஞர் அமைப்பினர் தலைச்சேரி அருகிலுள்ள பொன்னியம் எனுமிடத்திலுள்ள தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தினுள் நுழைந்து அதிகாரிகளைக் 'கெரோ' செய்து நிகழ்ச்சியை பல மணி நேரம் நிறுத்தினர்.

கடந்த பிப்ரவரி 17 அன்று அமர்ஜித்சிங் என்ற இந்திய ராணுவ் வீரர், விடுமுறையில் பஞ்சாபிலுள்ள தனது கிராமத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, பேருந்து கிடைக்காததால், வழியில் எதிர்ப்பட்ட ஒரு காரில் ஏறி வந்து கொண்டிருந்தார். மத்திய ரிசர்வ் போலீஸ் படையினர் அக்காரை வழிமறித்து காரோட்டியையும் ராணுவ வீரரையும் பட்டப்பகலில் பலர் கண் முன்னே சுட்டுக் கொன்றனர். அமர்ஜித்சிங் தான் ஒரு ராணுவ வீரர் என்று மன்றாடியும் கூட ரிசர்வ் போலீசார் ஏற்கவில்லை. பின்னர் அவர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர் என்றும் மோதலில் மாண்டதாகவும் போலீசு கதை கட்டியது. ராணுவ வீரருக்கே இந்த கதி என்றால்...?

சஹேலி, சாய்ஸ் 7 - எனும் இரு புதிய கருத்தடை மாத்திரைகளை இன்னும் 4 மாதத்தில் இந்திய அரசு பெண்களிடம் விற்பனை செய்ய உள்ளது. இம்மருந்துகளை சிலருக்கு ஆரம்பச் சோதனையின் போது கொடுத்தபோது அவர்களின் கருப்பைகள் வீங்கிவிட்டன. மருத்துவத்துறை இயக்குனரகம் இதை நிறுத்தி விடுமாறு கோரிய போதிலும் மருந்து கட்டுப்பாட்டுத் துறை இதற்கு அங்கீகாரம் அளித்து பெருமளவில் உற்பத்தி செய்யத் தீர்மானித்துள்ளது.



வங்க தேசத்திலிருந்து சாக்மா அகதிகள் திரிபுரா மாநிலத்திற்கு ஓடிவந்து அல்லற்படுகின்றனர். வறுமையில் உழலும் அவர்களின் குழந்தைகளை 'அனாதைக் குழந்தைகள்' என்ற பெயரில் பிரான்சுக்கு அனுப்பி வைத்து அந்நாட்டிலுள்ள தம்பதிகள் தத்து எடுத்துக் கொள்ள சிசு கருணா சங்கம், பார்டேஜ் முதலான தன்னார்வக் குழுக்கள் உதவி செய்து வந்தன. தாங்கள் கஷ்டப்பட்டாலும் தங்கள் குழந்தைகள் நன்றாக இருக்கட்டும் என்று பல சாக்மா அகதிகள் தமது குழந்தைகளைப் பிரான்சுக்கு அனுப்பி வைத்தனர். இப்படி கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு அனுப்பப்பட்ட 72 குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள்; அவர்களின் கதி என்ன என்று இன்றுவரை தெரியவில்லை.

இதற்கு ஏற்பாடு செய்த தன்னார்வக் குழுக்கள் இப்போது சாக்கு போக்கு சொல்லி தட்டிக் கழிக்கத் தொடங்கியதும், ஆத்திரமடைந்த அகதிகள் பிரெஞ்சு அதிபருக்கு கடிதம் எழுதி முறையிட்டுள்ளனர். இக்குழந்தைகள் பிரான்சு நாட்டில் கொத்தடிமைகளாக்கப்பட்டிருக்கலாம் அல்லது வேறு நாட்டுக்கு அடிமையாக விற்கப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சங்கர் குகா நியோகி - மத்தியப் பிரதேச - பீகார் தொழிலாளர்களின் போர்க்குணமிக்க பிரபல தலைவர். பிலாய் எ∴கு ஆலை மற்றும் இதர தனியார் ஆலைத் தொழிலாளர்களின் உரிமைக்காகவும், அடக்குமுறைக்கு எதிராகவும் அவர் தொடர்ந்து போராடி வருகிறார். அவரது சங்கத்தின் வலிமையையும் போர்க் குணத்தையும் கண்டஞ்சிய மத்திய பிரதேச பாரதீய ஜனதா அரசு, கடந்த பிப்ரவரி 4ம் தேதியன்று அவரையும் சங்க முன்னோடிகளையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைத்துள்ளது. இதற்கெதிராக ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும், மனித உரிமைக் கழகத்தினரும் அவரை விடுதலை செய்யக் கோரி போராடி வருகின்றனர். பாரதீய ஜனதாவின் இந்து நலன் என்பதெல்லாம் முதலாளிகளின் நலன்தான்! தொழிலாளிகளுக்கு எதிரானது தான்!

படிப்பகம்

www.padippakam.com

## இட்லிக்கும் தோசைக்கும்

# பறிபோகுது ஆதிவாசி நிலம்



**ஜனநாயக, அமைதி வழியின் மூலமே நிலப்புரட்சி செய்து வருவதாகப் பீற்றிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளின் பல ஆண்டுகால ஆட்சியில்தான் இது நீடிக்கிறது**

தமக்கே உரிய கலாச்சார - மரபுகளோடு இயைந்த கள்ளம் கபடமற்ற மனித உறவு!

சிறுசிறு நிலங்களைக் கொண்டிருந்தாலும் பஞ்சமில்லா வாழ்க்கை!

சுரண்டலில்லை. ஏய்ச்சுப் பிழைக்கும் எச்சில் பிழைப்பு இல்லை; சுயதேவை அடிப்படையிலான பொருளாதாரம்!

இயற்கையோடு பிறந்து இயற்கை வளப் பொருட்களோடு ஒட்டி வாழும் வாழ்க்கை!

கேரளா பாலக்காடு மாவட்டத்தில் உள்ள அட்டப்பாடி மலை! இங்குள்ள இருளர், முதுகர் குறும்பர் ஆதிவாசிகளின் வாழ்க்கை இப்படித்தான் அமைந்திருந்தது!

ஆனால், அத்தனையும் உருக்குலைந்தது! ஆதிவாசிகளின் கலாச்சார - மரபுகள் மட்டுமல்ல; வாழ்வே அற்றுப்போனது! மிச்ச சொச்சமாக இருந்த நிம்மதியும் போனது!

ஆம், 1961ல் 62.7 சதவிகிதமாக இருந்த பழங்குடியினரின் ஜனத்தொகை 20 ஆண்டுகளில் 33.1 சதவிகிதமாகியது!

எப்படி நிகழ்ந்தது இது?

அரசாங்க 'லைசென்சை' தூக்கிக் கொண்டு என்ற் அமைப்பினர், ஆதிவாசிகளின் வீட்டைச் சூறையாடுவது, தீக்கிரையாக்குவது, வயது வித்தியாசமின்றி தாக்குவது, பெண்களை கற்பழிப்பது... என அனைத்தையும் செய்கிறார்கள். உள்ளூர் போலீசு உதவியுடன் தமிழ்நாட்டிலிருந்து லாரியில் குண்டர்களை கொண்டு வந்து இதைச் சாதிக்கிறார்கள்.

இதுவன்றி நிலத்தை மீட்க விசாரணைக்கு வரும் அதிகாரிகளை அடித்து விரட்டுவதும் இவர்களது வாடிக்கை. 1987ல் பூத்திவழி கிராமத்தில் உதவி கலெக்டரையும், இலாச்சிவழி கிராமத்திற்கு வந்த அதிகாரிகளையும் அடித்துவிரட்டினர்.

நிலப் பிரபுக்கள், லேவாதேவிக்காரர்களுமே அட்டப்பாடியின் பொருளாதாரத்தை தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்கள். அரசின் சகல துறைகளிலும் செல்வாக்கு செலுத்துபவர்களும் இவர்களே! மார்க்சிஸ்டுகள் உட்பட அனைத்து ஓட்டுக் கட்சியினரும் இவர்கள் காலை நக்கித்தான் இங்கு ஓட்டுப் பொறுக்குகிறார்கள்!

ஆங்கிலேயன் காலத்திலிருந்தே அட்டப்பாடி ஆதிவாசிகளின் வாழ்வு பாதிக்கப்பட்டது என்றாலும் 1974க்குப் பின்னும் இதே நிலைதான்! அட்டப்பாடி மலையில் காடுகள் இன்று 10 சதவிகிதம்

**மூன்று இட்லிக்காக தனது துண்டு நிலத்தை ஒரு ஆதிவாசி இழந்தார். வடகாட்டதுரை கிராமத்தில் ஆதிவாசி ஒருவர் தனது 4 ஏக்கரா நிலத்தை போலியான சாப்பாட்டு ரசீது ஒன்றுக்காக இழந்திருக்கிறார்.**





படிப்பகம்



**1977-ல் அரசு தந்த புள்ளி விவரப்படியே 62 சதவிகிதத்தினர் வெளியேறி இருந்தனர். இன்றோ இது 80,90 சதவிகிதத்தை எட்டியுள்ளது.**

காட்டு மரங்களை எல்லாம் 'காண்டிராக்ட்' எடுத்துள்ளேன் என ஓடி வந்தான் ஒருவன்! வெட்டி கட்டி எடுத்துப் போய் சந்தையில் காசாக்கினான்!

''நான் அரசாங்க அதிகாரி; காட்டு வளப் பொருட்களுக்கு காவலாளி; ஒரு துரும்பையும் எடுக்கக் கூடாது'' என்று வந்தான் இன்னொருவன்! சட்ட விரோதமாக காட்டுப் பொருட்களை கடத்துவதற்கு உதவி வயிறு வளர்த்தான்!

புதிது புதிதாக வந்து குடியேறிய காண்டிராக்ட்காரர்கள், அதிகாரிகள், வியாபாரிகள், நிலப் பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள் எல்லாம் ஆதிவாசிகளின் அறியாமையையும் வறுமையையும் பயன்படுத்தி ஏய்த்துக் கொழுத்தனர்.

கூலி வாங்கியதற்கு அத்தாட்சி எனக் கூறி கடன் பத்திரத்தில் ஏமாற்றி கை நாட்டை வாங்கினார்கள். மேலும் கடன் வாங்கியதற்கு அத்தாட்சி எனக்கூறி நிலப் பத்திரத்தில் கை நாட்டை வாங்கினார்கள். இறுதியில் சட்டப்படி நிலம் தனக்குத்தான் சொந்தமென ஆதிவாசிகளின் நிலங்களைப் பிடுங்கினார்கள்.

ஹோட்டல் கடைக்காரர்கள் கூட கடனாகக் கொடுத்த இட்லி, தோசைக்கு ஈடாக நிலத்தைப் பிடுங்கிய கொடுமையும் உண்டு.

கைக்குற்றல் அரிசியில் சோறு பொங்கி காலந்தள்ளியவர்கள் ஆதிவாசிகள்! இட்லியும், சட்னியும், மசாலா தோசையும் இவர்களுக்குப் புதியவை! புதியவகை உணவைக்காட்டி எளிதாக ஏய்த்தார்கள், கயவர்கள்! 1965ல் மூன்று இட்லிக்காக தனது துண்டு நிலத்தை ஒரு ஆதிவாசி இழந்ததை நினைவு கூறுகிறார்கள் முதியவர்கள்! 1967லும் வடகாட்டதுரை கிராமத்தில் ஆதிவாசி ஒருவர் தனது 4 ஏக்கரா நிலத்தை போலியான சாப்பாட்டு ரசீது ஒன்றுக்காக இழந்திருக்கிறார்.

நிலத்தைப் பிடுங்கிக் கொண்டதோடு இருக்க இடமுமில்லாமல் பழங்குடியினர் விரட்டியடிக்கப்பட்டனர். இல்லாமையின் கொடுமையால் இருந்த நிலத்தை விற்று வாழ்ந்தவர்களும் கட்டியிருந்த கந்தலோடுதான் வெளியேற முடிந்தது.

1977ல் அரசு தந்த புள்ளிவிவரப்படியே 62 சதவிகிதத்தினர் வெளியேறி இருந்தனர். இன்றோ, அது 80, 90 சதவிகிதத்தை எட்டியுள்ளது. அட்டப்பாடியில் எஞ்சியிருக்கும் ஆதிவாசிகளின் கையிலும் விவசாயத்திற்குப் பயனில்லாத நிலங்களே உள்ளன! விவசாய நிலங்கள் அனைத்தும் நிலப் பிரபுக்கள் லேவாதேவிக் காரர்கள் கையில்!

சட்டப்படி ஆதிவாசிகள் மேம்பாட்டிற்கென அரசு, 7.16 கோடி ரூபாயை ஒதுக்கி பல திட்டங்கள் போட்டது. ஆதிவாசிகள் நிலங்களில் கிணறு வெட்டியதாகவும், ரோடு போட்டதாகவும், பிள்ளைகளின் மேல்படிப்புக்கு உதவியதாகவும் அரசு கணக்கு காட்டியது! ஆனால், ஆதிவாசிகளின் தலைவர்கள், அரசின் திட்டங்கள் வெறும் கண்துடைப்பு என்கிறார்கள். அரசு வெட்டிய 30 கிணற்றில் 20 வறண்டுபோய் பயனற்றிருப்பதைக் காட்டுகிறார்கள்.

ஆதிவாசிகளை ஏமாற்றி பிடுங்கப்பட்ட நிலங்களை மீட்டுக் கொடுப்பதற்காக 1975-லேயே அரசு சட்டம் போட்டது. இச்சட்டம் கேரளாவில் 1985ல்தான் அங்கீகாரமே பெற்றது. அரசியல்வாதிகள், நிலப்பிரபுக்கள், லேவாதேவிக்காரர்களின் குறுக்கீடுகளாலேயே இத்தாமதம்! சட்ட அங்கீகாரமே இந்நிலையென்றால் நடைமுறையின் லட்சணம்...?

தமது நிலங்களை மீட்டுத்தருமாறு ஒத்தபாளம் கிராமத்து வருவாய்த் துறை அலுவலர்க்கு 1988ல் வந்த 2,887 ஆதிவாசிகள் மனுக்களில் 99% குப்பைத் தொட்டிக்குப் போனது. எஞ்சிய ஒரு சதவிகிதமும் நடைமுறையில் தோல்வி கண்டது.

நிலப்பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள், வியாபாரிகள் போன்றவர்களால் உருவாக்கப்பட்ட 'கர்சகா ரக்ஷா சமிதி' மட்டுமே இருக்கிறது. நிலத்தோடும், காட்டு வளப்பொருளோடும் இருந்து வாழ்வே அற்றுப்போய் ஆதிவாசிகளின் இனமே கேள்விக்குறியில் நிற்கிறது!

பல வருடகால ஆட்சியில் மார்க்சிஸ்டுகளால் அட்டப்பாடி ஆதிவாசிகளின் வாழ்வை முன்னேற்றவும் முடியவில்லை; அவர்கள் வாழ்விழக்காமல் தடுக்கவும் முடியவில்லை. ஆனால், 'நிலச்சீர்திருத்தம் கேரளாவில் கொடிகட்டிப் பறக்கிறது: பின்தங்கியவர்கள் சமுதாயத்தில் முன்னேற்றப்படுகிறார்கள்' என்று சவடால் அடிப்பது மட்டும்தான் முன்னேறியிருக்கிறது. ''கேரளாவையும், மேற்கு வங்கத்தையும் பார் பார்'' என்று கோஷமிடுகிறார்களே என்று பார்த்தால், மூலை முடுக்குகளில் எல்லாம் புகுந்து பார்த்தாலும், பாவம்(!) 'மார்க்சிஸ்டு'களின் 'சாதனை' இப்படி வேதனையில்தான் முடிகிறது!

பஸ்தார், இந்திரவல்லி போன்ற பகுதிகளில் எல்லாம் நக்சல்பாரிகளின் பின்னே திரண்டிருக்கிறார்கள் பழங்குடியினர்! ஏனெனில், பழங்குடியினர் வாழ்விற்கு வழிகாட்டும் நட்சத்திரமாக செயல்படுகிறார்கள் நக்சல்பாரிகள்! அட்டப்பாடி பழங்குடியினரும் இதை உணரும் காலம் அருகில்தான் இருக்கிறது.

● சப்பு

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

மிகவும் வெறுக்கத்தக்க, காட்டுமிராண்டித்தனமான, அநாகரிகமான ஆக்கிரமிப்பு, அழிவுப் போரில் அமெரிக்காவும் அதன் 28 நாட்டுக் கூட்டுப்படைகளும் வெற்றி பெற்றுள்ளன. குவைத்தை விடுவிப்பதற்காகத்தான் இந்த வளைகுடாப் போர் என்கிற அமெரிக்காவின் புளுகை பாமரத்தனமாக நம்பிக் கொண்டிருந்தவர்கள் மட்டுமல்ல; அதை நம்ப மறுத்து, அமெரிக்காவின் வளைகுடா மற்றும் உலக மேலாதிக்கத்துக்கானதுதான் என்பதைப் புரிந்து கொண்டவர்களுக்குக் கூட போரின் போக்கு, குறிப்பாக அதன் இறுதி நாட்களில் அமெரிக்க யுத்த வெறியன் ஜார்ஜ் புஷ் காட்டிய அகங்காரமும், மூர்க்கத்தனமும், அது விளைவித்த நாசமும், கோரமும் அதிர்ச்சியளித்தன.

அமெரிக்காவின் பகைநாடும், இப்போரில் நடுநிலை வகித்ததுமான ஈரானும், வேறு சில நாடுகளும் போர் நிறுத்தம் - சமாதானத்துக்காக சதாம் உசைனின் நிபந்தனைகளுடன் கூடிய முன்வரவை அமெரிக்கா நிராகரித்தபோது, பல நாடுகளும் மக்களும் வியப்படையவில்லை. தோல்வி நிச்சயம் என்ற நிலையில், நிபந்தனைகளை எல்லாம் கைவிட்டு அடுத்தடுத்து சதாம் உசைன் இறங்கி வந்ததையும் அமெரிக்கா நிராகரித்தபோது, அதன் உண்மையான நோக்கங்கள் மீது பலநாடுகளுக்கும் மக்களுக்கும் சந்தேகம் எழுந்தது.

இறுதியாக, குவைத் மீதான ஆக்கிரமிப்பு உரிமையைக் கைவிட்டு, அங்கிருந்து படை விலக்கத்துக்கு உத்திரவிட்டதோடு, ஐ.நா. தீர்மானங்கள் அனைத்தையும் ஏற்பதாக சதாம் ஒப்புக் கொண்டார். பிறகு அமெரிக்காவின் அனைத்து நிபந்தனைகளையும் ஏற்றார். இந்த நிலையில் அமெரிக்கா அதை ஏற்க மறுத்து, பின்வாங்கித் தப்பியோடும் ஈராக்கியப் படையின் 50000 பேரைப் படுகொலை செய்தும், தொடர்ந்து ஈராக்கிய நகரங்களை விமான - ஏவுகணைக் குண்டு வீச்சுகளால் தாக்கியும், குவைத்தைப் போல மூன்று மடங்கு ஈராக்கியப் பகுதிகளைக் கைப்பற்றியும் போரைத் தொடர்ந்தபோது அமெரிக்காவின் ஆதிக்க ஆக்கிரமிப்பு நோக்கங்களை உலகம் முழுவதும் கண்டது — கைகட்டி, வாய் பொத்தி, அதிர்ச்சியோடு!

ஈராக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய நாசம் கோரம் பற்றி ஆத்திரத்தோடும் விரிவாகவும் அம்பலப்படுத்தினோம். அதன் ஆதிக்க நோக்கங்களைக் குறித்து முன்கூட்டியே எடுத்து வைத்தோம். வளைகுடாப் போரில் இறங்கியுள்ள இரண்டு தரப்புமே நாடு பிடிக்கும் அநீதியான, ஆக்கிரமிப்பு, அழிவுப் போர் நடத்துகின்றன; இதிலே எத்தரப்பையும் ஆதரிக்க முடியாது என்கிற யுத்த எதிர்ப்பு இயக்கத்தை மிகச் சரியாகவே நடத்தினோம். இருந்த போதும் இப்போரில் ஈராக் மற்றும் அதன் எதிரணியின் இராணுவ வலிமை பற்றிய மதிப்பீடு, அமெரிக்காவின் யுத்தத்திட்டம் - படை வியூகம் மற்றும் தாக்குதல் போன்ற இராணுவ ரீதியிலான விவகாரங்களில் மட்டும் ஆய்வுகள் செய்து முன்வைப்பதில் புரட்சியாளர்கள் உட்பட அனைவருமே விதிவிலக்கின்றித் தவறு செய்துள்ளோம்.

**ஏற்றதாழ்வான வலிமையுடைய இப்போரில் ஈராக் இறுதி வெற்றியடைய முடியாது என்பதை அனைவரும் அறிவோம்; ஆனாலும் அதன் வீழ்ச்சி திடீரென்றும் எதிர்பாராத வகையிலும் அமைந்தது.**



அமெரிக்காவின் இராணுவ, அரசியல் வலிமையின் முன்பு உலகையே மண்டியிடும்படி நிர்பந்திக்கிறது.

# ஆயுதப் போர் முடிந்தது! அரசியல் போர் தொடர்கிறது!

போரின் இறுதிச் சில நாட்கள் வரை இத்தவறு நீடித்தது. எனவேதான் ஏற்றத் தாழ்வான வலிமையுடைய இப்போரில் இராக் இறுதி வெற்றியடைய முடியாது என்பதை அனைவரும் அறிவோம். ஆனாலும், அதன் வீழ்ச்சி திடீரென்றும் எதிர்பாராத வகையிலும் அமைந்தது.

☆ ஒரு சில நாட்களிலேயே வளைகுடாப் போரில் வென்று விடுவோம் என்றும், முதல் சுற்று விமானத் தாக்குதலிலேயே ஈராக்கின் இராணுவ வலிமை நிலைகுலைந்து போனது. முக்கியமான இராணுவ, குறிப்பாக அதன் விமான - ஏவுகணை அணு ஆயுத நிலைகள் தகர்க்கப்பட்டுவிட்டன என்றும் அமெரிக்கா கூறியது. ஆனாலும், போர் பலநாட்கள் நீடித்தது; ஈராக் ஏவுகணைத் தாக்குதல்களை வெற்றிகரமாக நடத்தியது; சவுதி அரேபியாவின் எல்லை நகரான காஃப்ஜியைக் கைப்பற்றி விட்டு பின் வாங்கியது. ஈராக்கும் மற்றவரும் எதிர்பார்த்தபடி அமெரிக்கா தரைப்போரைத் துவங்காது தயக்கங்காட்டியது. இக்காரணங்களை வைத்து அமெரிக்காவின் இராணுவ போர்க் கணக்குகள் பிசகிவிட்டன; வியத்நாமில் நடந்ததுபோல தோல்வி அடையாவிட்டாலும், விரைவான சுலபமான வெற்றி ஈட்ட முடியாது; பாலைவனப் புயலில் அமெரிக்கா சிக்கிக் கொண்டது என்று தவறாகவே பலரும் கருதினோம்.

☆ உலகிலேயே ஐந்தாவது பெரிய ஈராக் இராணுவம், எட்டாண்டுகள் ஈரானுடனான போரில் அனுபவமும், வலிமையும் உறுதியும் பெற்றுள்ளது; நவீன ஏவுகணைகள், அணு ஆயுதங்கள், இரசாயன - உயிரியல்

⬆ அமெரிக்காவிடம் சரண் அடையும் ஈராக்கிய படைவீரர்கள்



படிப்பகம்.

www.padippakam.com

ஆயுதங்கள் பெற்றிருக்கிறது. ஆகவே விமான, கடற்போரிலே வெற்றி பெறாவிட்டாலும், இறுதியில் வலுவான எதிரிப் படையிடம் தோல்வி அடைந்தாலும் சதாம் எச்சரித்ததைப் போலவே அவர்களுக்குப் பெரும் - பயங்கர அழிவை ஏற்படுத்தி விடுவார் என்றே பலரும் கருதினோம். குறிப்பாக பாலைவனப் போர், தற்காப்பு ஏற்பாடுகள் உட்பட ஈராக்கின் இராணுவ வலிமை பற்றி மிகை மதிப்பீடே செய்தோம். ஈராக்கின் இராணுவ வலிமை ஓரளவு இருப்பினும் அது, அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களோடு ஒப்பிடும்போது காலனிய ஆக்கிரமிப்பாளர்களின் பீரங்கிகளுக்கு முன்பிருந்த சுதேசி மன்னர்களின் கோட்டைகளையும் மரபு வழி ஆயுதங்களையும் போன்றதுதான் என்பதை அறியத் தவறினோம்.

☆ ருஷ்யாவுடனான பனிப் போர் முடிந்துவிட்டது; இனி ஆயுதப் படைக் குறைப்பு, சமாதானம்தான் என்று அமெரிக்கா பசப்பித் திரிவதை நம்ப முடியாது, பொய் என்றுதான் பலரும் கூறிவந்தோம். விண்வெளிப் போர்த் தயாரிப்பு உட்பட அதீநவீன ஆயுதக் குவிப்பையும், இராணுவ மயமாக்கத்தையும் கைவிடவில்லை என எச்சரித்து வந்தோம். லேசர் கதிரியக்க வழிகாட்டி குண்டு வீச்சு, காற்றை வெடித்துத் தீ பரப்பும் குண்டு வீச்சு முதல், இயந்திர மனிதர்களின் படை வரை அதிநவீன ஆயுதங்களையும், ஆளின்றிப் போய் மின்னல்வேகத் தாக்குதல் நடத்தும் விமானங்களையும், கம்ப்யூட்டர்களைக் கொண்டியங்கும் கவச வண்டிகள் - பீரங்கிகளையும், இலக்குத் தவறாமல் தாக்கும் தொலை தூர ஏவுகணைகளையும், எதிரியின் ஏவுகணைகளை எதிர் கொண்டு தாக்கும் ஏவுகணையும் உள்ளடக்கிய "வான் - தரைச் சண்டை - 2000" என்கிற அதிநுட்ப யுத்த அமைப்பை அமெரிக்கா பெற்றுள்ளது. போரில் இவை அனைத்தும் ஏற்படுத்தும் விளைவுகளைக் கவனத்தில் கொள்ளப் பலரும் தவறினோம்.

☆ அமெரிக்கா அதன் முதல் தாக்குதலிலேயே இறுதியான தீர்க்கமான வெற்றி ஈட்ட முடியாமற் போனது, ஈராக்கின் தற்காப்பு - இராணுவ வலிமை ஆகியவை அதன் பாதகமான நிலைமை எனப் பலரும் எண்ணிக் கொண்டிருந்தோம். ஆனால், குவைத்தை மீட்பதற்கான ஐ.நா.வின் தீர்மானங்களைத் தனது சொந்த நோக்கங்களுக்கு வளைத்து ஈராக்கின் இராணுவ பொருளாதாரக் கட்டுமானங்களை சர்வ நாசம் செய்வதற்கு இதையே தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது அமெரிக்கா. சர்வநாசம் விளைவிக்கும் விமானத் தாக்குதலை நியாயப் படுத்துவதற்காகவே ஈராக்கின் இராணுவ வலிமையைப் பற்றி எதிரணியினர் மிகையாக்கிப் பிரச்சாரம் செய்தனர். தொடர்ந்து பேரழிவுத் தாக்குதலை நடத்துவதற்காகவே ஈராக்கின் தற்காப்பு - தாக்குப் பிடிக்கும் திறமை - வலிமை - தயாரிப்புகள் பற்றியும் பொய்ப் பிரச்சாரமும் செய்தனர். இராணுவ அறிவில் பாமரர்கள் மட்டுமல்ல, நிபுணர்களும் இதை நம்பினர். தரைப் போர் பிரகடனப் படுத்திய பிறகும் போர் நீண்டகாலம் நீடிக்கும், எதிர்த்தரப்புக்கு பயங்கர சேதம் விளையும் என்று ஈராக் சவடால் அடித்தது. பலரும் அதை



அதிநவீன கம்ப்யூட்டர்களைக் கொண்டு இயங்கும் அமெரிக்காவின் கவசவண்டிகள் - பீரங்கிகள்.

அப்போதும் நம்பினோம். ஆனால், அப்போர் துவங்கிய சில மணி நேரங்களிலேயே ஈராக்கின் தற்காப்பு மணற்கோட்டைகளாய் சரிந்தது; படைகள் சரணடைந்தன.

☆ இதற்குக் காரணம் அமெரிக்க, இங்கிலாந்து, பிரெஞ்சுத் தரைப்படையின் வலிமை மட்டுமல்ல. தரைப்போர் துவங்குவதற்கு முன்பு 38 நாட்கள் இடைவிடாது, இரவும் பகலும் அவற்றின் விமானங்களும் ஏவுகணைகளும் குண்டுமாரிப் பொழிந்தன. "இனிக் குண்டு வீசுவதற்கே இடமில்லை" என்று கூறும் போர் விமானிகளிடம் "எங்கேயாவது வீசிவிட்டு வா" என்று தளபதிகள் உத்திரவு போட்டனர். அவ்வளவு அபரிமிதம். ஒரு லட்சம் தடவை பறந்து போய், இரண்டு லட்சம் டன் குண்டுகள் வீசின. அணுகுண்டுகள் வீசவில்லைதான். ஆனால், நாகசாகி - ஹிரோஷிமா ஆகிய ஜப்பானிய நகரங்களின் மீது வீசிய அணுகுண்டுகளை விட அதிகப்பாதிப்பு ஏற்படுத்தும் அளவு குண்டு வீச்சு நடந்தது; இரண்டு லட்சம் சிவிலியன்கள் கொல்லப் பட்டனர். அதனால்தான் தரைப்போர் துவங்கிய நூறு மணி நேரத்தில் குவைத்தை மீட்டு, தென் ஈராக்கை எதிரிகளால் கைப்பற்ற முடிந்தது; அமெரிக்கர்களே எதிர்பாராத விரைவான - எளிதான வெற்றி! அந்த அளவு ஈராக்கை துவம்சம் செய்து விட்டார்கள்!

எல்லாவற்றையும் விட நிபந்தனையின்றியும், நிபந்தனையோடும், ஒப்பீட்டு ரீதியில் பார்த்தும் ஈராக்கை ஆதரித்தவர்கள் சித்தரித்ததைப்போல இது நீதியான யுத்தம் அல்ல. நாடுபிடிக்கும் போட்டியில், சர்வாதிகாரி சதாம் நடத்திய ஆக்கிரமிப்பு. அநீதி யுத்தம். ஆகவே, ஏற்கனவே, அதிருப்தியுற்றிருந்த ஈராக்கிய இராணுவத்தினர், தற்காப்புப் போரைக் கூட முழுமனதுடன் நடத்தாது, போரிட மறுத்து திடீரெனச் சரணடைந்தனர். அல்லது பின்வாங்கித் தப்பியோடினர். எனவே ஈராக்கின் வீழ்ச்சி விரைவாகவே வந்துவிட்டது.

அமெரிக்காவின் வெற்றியையும், இராணுவ வலிமையையும் மிகைப்படுத்துவதற்காக இவற்றை இங்கே நாம் தொகுத்துத் தரவில்லை. இறுதியில், ஏகாதிபத்தியங்கள் வீழ்த்தப்படும்; அவற்றுக்கு எதிரான புரட்சிப் போரில் உலக மக்கள் வெல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், அது இன்றோ, நாளையோ விரைவானதாகவோ இராது. இதையும் ஏகாதிபத்தியங்களின் யதார்த்தமான வலிமையையும் சரியாக நாம் மதிப்பிட வேண்டும். இல்லையானால், வீண் பிரமைகளிலும், சதாம், கடாஃபி போன்ற பிராந்திய ஆதிக்க வாதிகளின் நோக்கங்களுக்கும், போலியான ஏகாதிபத்திய எதிர்ப்புக்கும் பலியாவோம்.

வளைகுடாப் போரில் வெற்றியடைந்ததன் மூலம் அமெரிக்க மேல்நிலை வல்லரசு இந்த உலகம் ஒற்றைத் துருவ அமைப்பாகிவிட்டதை உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது அமெரிக்காவை மையமாகக் கொண்டு அதன் நலன்களுக்காக அது விதிக்கும் நிபந்தனைகள், கட்டுப்பாடுகள், நிர்பந்தங்களுக்கு உட்பட்டுத்தான் உலக நாடுகள் இனி செயல்பட வேண்டும் என்கிற மேலாதிக்கத்தை அது உறுதிப்படுத்தியுள்ளது. இதைத்தான் "ஒரு புதிய உலக அமைப்பை" உரு

***இறுதியில் ஏகாதிபத்தியங்கள் வீழ்த்தப்படும்; அவற்றுக்கு எதிரான புரட்சிப் போரில் உலகமக்கள் வெல்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது இன்றோ, நாளையோ விரைவானதாகவோ இராது. இதையும் ஏகாதிபத்தியங்களின் யதார்த்தமான வலிமையையும் சரியாக நாம் மதிப்பிட வேண்டும்.***



படிப்பகம்

www.padippakam.com

வாக்குவது என்று அமெரிக்கா கூறிக் கொள் கிறது.

''வளைகுடாப் போர்தான் இறுதியானது; இனிப் போர்களற்ற உலகமாக இது மாறி விடும்'' என்றும் ''இனிவரும் ஆண்டுகள் அமெரிக்காவின் ஆண்டுகள்'' என்றும் புஷ் பேசும்பொழுது அமெரிக்காவை ஒற்றைத் துருவமாகக் கொண்டு இயங்கும் உலக மேலாதிக்க அமைப்பு முறையைத் தான் குறிப்பிடுகிறார்.

ஐக்கிய நாடுகள் சபையில் வளைகுடாப் பிரச்சினை மீதான தனது ஒருதலைப் பட்சமான தீர்மானங்கள் அனைத்தையும் எதிர்ப்பின்றி நிறைவேற்றியது; அத்தீர்மானங்களின் வரம்புகளை மீறி ஈராக்கின் மீது சர்வ நாசம் விளைவிக்கும் போரை நடத்தியது; அரபு நாடுகளைப் பிளவுபடுத்தி, அவர்களோடு 28 நாடுகளின் கூட்டுப்படையைத் தன் ஆணையின் கீழ்த் திரட்டிப் போரிட்டது; தனது கூட்டு நாடுகள் உட்பட பல உலக நாடுகள் மன்றாடியதையும் துச்சமாக மதித்துப் போரைத் தொடர்ந்தது; ஈராக்கை ஆக்கிரமித்துக் கொண்டு ஆட்சிக் கவிழ்ப்பிலும் பகிரங்கமாக ஈடுபடுவது; இஸ்ரேல் பாலஸ்தீன - அரபு - விவகாரங்களில் அக்கிரமமான, அடாவடித்தனமான ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தித் தொடருவது; இவை அனைத்திலுமே அமெரிக்காவின் நிலையை யாரும் எதிர்க்க முடியாமல் செய்து விட்டது ஆகியன — அது உலகை ஒற்றைத் துருவ அமைப்பாக்கி விட்டதைக் காட்டுகின்றன.

கடந்த ஆண்டுவரை அமெரிக்கா, ருஷ்யா ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளின் உலக மேலாதிக்கத்துக்கான போட்டி முரண்பாடுகளைக் கொண்ட இரு துருவங்களைக் கொண்டதாக உலக அமைப்பு இருந்தது; இப்போது பொருளாதார ரீதியில் வளர்ந்துவிட்ட ஐரோப்பிய சமூகம், குறிப்பாக ஜெர்மனியும், ஜப்பானும் உள்ளடக்கிய பல துருவங்களின் அமைப்பாக உலகம் மாறிவிட்டதாக ருஷ்யாவின் கோர்பியும், சீனாவின் தெங்கும் கனவு கண்டனர். இனி உலகில் சமாதானம், பொருளாதாரப் போட்டி மட்டுமே நடக்கும். புரட்சிக்கும் போருக்கும் இடமில்லை என்றனர். இதைக் கூறியே அமெரிக்காவின் வளைகுடா ஆக்கிரமிப்புப் போருக்கு அங்கீகாரம் வழங்கினர்.

ஆனால், பொருளாதார பலத்தோடு அமெரிக்காவின் இராணுவ அரசியல் பலத்தையும் ஏகாதிபத்திய முரண்பாடுகளையும் அவர்கள் காண மறுக்கின்றனர்.

வெற்றிக் களிப்பிலே மிதக்கும் அமெரிக்கா கனவு காண்பதைப்போல அதன் ஒற்றைத் துருவ உலக அமைப்பு நிரந்தரமானதோ, நூறாண்டு காலம் நீடிக்கக் கூடியதோ அல்ல. உலகின் மிகப் பெரிய கடனாளி நாடாகி, வீழ்ச்சியுறும் அதன் பொருளாதாரத்துக்கு வளைகுடாப் போரில் அடிக்கும் கொள்ளை தற்காலிக நிவாரணமாகவே இருக்கும். இப்போதே அக்கொள்ளையிலும், ஆயுதப் போட்டியிலும் பங்கு போடுவதற்குப் பிற ஏகாதிபத்தியங்கள் துடிக்கின்றன. குவைத்தின் மறு நிர்மானத்துக்கான ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் ஒப்பந்தங்களை அமெரிக்க முதலாளிகளே வளைத்துப் போட்டுக் கொண்டது குறித்து அவை ஆத்திரமாயுள்ளன.

வளைகுடாவில் அமெரிக்கா சாதித்துள்ள இராணுவ வெற்றியைத் தொடர்ந்து முற்றிலுமான அரசியல் ஆதிக்கத்துக்கு எத்தனிக்கிறது. இஸ்ரேல் - பாலஸ்தீன - அரபு பிரச்சினையை அதே மூர்க்கத்தனமாகத் தீர்க்க முனைகிறது. இஸ்ரேலை அரபு நாடுகள் அங்கீகரித்து, அதன் பிராந்திய ஆதிக்கத்தை ஏற்கும்படி அரபு நாடுகளை நிர்ப்பந்திக்கிறது. அனைத்துப் போராளி அமைப்புகளும் அங்கீகரித்துள்ள பாலஸ்தீன விடுதலை அமைப்பையும் அதன் தலைவர் அராஃபத்தையும் பிரதிநிதியாக ஏற்க மறுக்கிறது. அங்கும், ஈராக்கிலும் தனது அடிவருடிகளைக் கொண்ட பொம்மை ஆட்சியை நிறுவுவதற்கான பகிரங்கமான சதியில், அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. ஆனால், போரிட்டு இப்போது தான் நிறுவியுள்ள குவைத்தின் அமீரின் ஆட்சிக்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவின் பேராசைக்கு மாறாக குவைத்திலும், ஈராக்கிலும் இசுலாமிய மதவாதச் சக்திகளின் கைதான் மேலோங்கியிருக்கிறது. ஆகவே, வளைகுடாப் போரின் வெற்றியைத் தக்க வைத்துக் கொள்வதற்கான இழுபறியில் அமெரிக்கா சிக்கிக் கொண்டுள்ளது.

● ஆர்.கே.

# தி.மு.க. ஆட்சிக் கலைப்பு: போலிஜனநாயகத்துக்கு எதிரான இயக்கம்

எத்தனை முறை ஜனநாயகம் படுகொலை செய்யப்படுமோ தெரியவில்லை. தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பொழுதும் ஜனநாயகம் படுகொலை செய்யப்பட்டதாக போலிக் கம்யூனிஸ்டுகள் வரை அனைவரும் குரல் எழுப்பினர். ஆனால், எவ்வித நியாயமும் காரணமும் இல்லாமல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது போலி ஜனநாயகத்துக்கு மேலும் ஒரு அத்தாட்சியே என புரட்சிகர அமைப்புகள் பறை சாற்றின. அதே சமயம் இந்த உரிமைப் பறிப்பை எதிர்க்கவோ உரிமைக்கான குரல் கொடுக்கவோ கருணாநிதிக்கு தகுதியில்லை என்பதையும் அம்பலப் படுத்தின.

● தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்காம்! கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்காம்!

● அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவை நீக்கு!

● பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுய நிர்ணய உரிமையை அங்கீகரி!

● அனைத்து தேசிய இனப் போராளிகளையும் தமிழகத்தில் சுதந்திரமாக செயல்பட அனுமதி!

— முதலான முழக்கங்களை முன்வைத்து மக்கள் கலை இலக்கிய கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி போன்ற அமைப்புகள் பிரச்சாரம் மேற்கொண்டன.

**மங்கலம்:** வி.வி.மு. சார்பாக 15.2.91 அன்று மங்கலத்தில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் வேடிராசு தலைமையில் தோழர்கள் கதிர்வேலன், வே.பழனி, க.சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். திருவெண்ணை நல்லூர் ஒன்றிய வி.வி.மு. கலைக்குழுவினர் புரட்சிகர கலை நிகழ்ச்சிகள் நடத்தினர். 300-க்கும் மேற்பட்ட மக்கள் கூடி ஆதரவளித்தனர்.

மேலும், திருவண்ணாமலை வட்ட வி.வி.மு. சார்பாக சுற்று வட்டார கிராமங்களில் தட்டி சுவரொட்டி பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. 2 நாட்கள் பேருந்துகளில் பேசி பிரச்சாரம் செய்யப்பட்டது. பேருந்தில் பலர் நிதியளித்து ஆதரவளித்தனர்.

**கல்லை வட்டம்:** வி.வி.மு. சார்பாக சு.கு எத்தூரில் தோழர் வடிவேல் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர்கள், கதிர்வேலன், கண்ணன், மாரிமுத்து, கே.பி.ராமசாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர். புரட்சிகர பாடல்களும் தோழர்களால் எழுச்சியோடு பாடப்பட்டது.

**தேனி வட்டம்:** அல்லிநகரத்தில் 20.2.91 அன்று வி.வி.மு. சார்பாக பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் வர்கீஸ் தலைமை தாங்க தோழர்கள் செல்வராசு, மோகன், கே.பி.ராமசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர். உத்தமபாளைய வட்ட வி.வி.மு. கலைக்குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. சுமார் 400 பேர் பகுதி மக்கள் திரண்டு ஆதரவளித்தனர். மனமுவந்து நன்கொடையளித்து உற்சாகமூட்டினர்.

**திருச்சி:** ம.க.இ.க. சார்பாக புத்தூர் நால் ரோட்டில் 21.2.91 அன்று தோழர் தமிழ் மணி தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர்கள் முத்து, காளியப்பன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். தோழர்களின் உணர்ச்சி மிகு பேச்சைக் கண்டு கூடியிருந்தவர்கள் கைதட்டி ஆர்ப்பரித்தனர். 750க்கும் மேற்பட்டவர்கள் கூடி தாராளமாக நன்கொடை அளித்து ஆதரவளித்தனர்.

**மதுரை:** செல்லூர் 50 அடி ரோட்டில் 22.2.91 அன்று ம.க.இ.க. பொதுக்கூட்டம் நடத்தியது. தோழர் பன்னீர் செல்வம் தலைமையில் சிறப்புரையாற்றிய தோழர்கள் கதிரவன், காளியப்பன் ஆகியோர் ஓட்டுக்கட்சிகளின் பதவி வெறியையும் ஜனநாயகத்தின் போலி வேடத்தையும் நன்கு அம்பலப் படுத்தினர். தோழர் முருகேசன் பகுதியில் டி.எம். கம்பெனி தொழிலாளி ஒருவர் தாக்கப்பட்டதை கண்டித்துப் பேசினார். புரட்சிகர கலை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இறுதிவரை கூடியிருந்த மக்கள் கலையாமல் ஆதரவளித்தனர்.

**சிவகங்கை:** 'புதிய ஜனநாயக' வாசகர் வட்டத்தின் சார்பாக பிரசுரம் அடித்து விநியோகிக்கப்பட்டது. நகரில் பரவலாக எடுத்துச் செல்லப்பட்ட இப்பிரச்சாரம் நல்ல வரவேற்பைப் பெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

# குற்றவாளிகளாக நீதிபதிகள்

## உச்ச''நீதி'' மன்றமும் ஊழல் நாயகர்களின் உறைவிடமாக விளங்குகிறது.

ஊழல் பெருச்சாளி - உச்ச ''நீதி''மன்ற ''நீதி''பதி ராமசாமி இன்னமும் பதவியில் நீடிப்பதும், அவரைப் பாதுகாப்பதில் பிற உச்ச ''நீதி''மன்ற ''நீதி''பதிகள் காட்டும் பகீரத முயற்சியும் நாட்டின் ஒழுக்கமும், நீதியும் எவ்வளவு தூரம் தரந்தாழ்ந்து போய் விட்டதென நிருபிக்கின்றன.

1987 - 89 ஆகிய இரண்டு ஆண்டுகள் பஞ்சாப் - அரியானா உயர்''நீதி''மன்றத்தில் தலைமை ''நீதி''பதியாக இருந்தார் ராமசாமி. அப்போது அதிகார முறைகேடுகள் பல செய்தும், வரம்பு மீறியும் பல லட்சம் ரூபாய் அரசுப் பணத்தைச் சூறையாடினார், சுருட்டிக் கொண்டார். அரசுப் பொதுத் தணிக்கை உயர் அதிகாரியே இதற்காக அவரைக் கண்டித்து உறுதிப் படுத்தியுள்ளார்.

காங்கிரசுக் கட்சியில் செல்வாக்குள்ளவர், அரசு பயங்கரவாதத்தை நியாயப்படுத்தித் தீர்ப்பு வழங்குபவர் என்பதாலேயே அடுத்தும் பதவி உயர்வு பெற்றதோடு, இவரது ஊழல்களை அதன் அரசு, குறிப்பாக, ''நீதி''த்துறை கண்டு கொள்ளவேயில்லை. சில பத்திரிக்கைகளும், வழக்குரைஞர் சங்கங்களும் இவரைக் கண்டித்து நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தின.

தலைமை ''நீதி''பதியோ, 'குடி'யரசுத் தலைவரோதான் அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். வேறு வழியின்றி, நிர்பந்தம் காரணமாக வேறு மூன்று உச்ச ''நீதி'' மன்ற ''நீதி''பதிகளைக் கொண்டு ராமசாமியின் ஊழல்களை விசாரிக்கும்படி உத்திரவிட்டனர். ஊழல்களுக்கான ஆதாரங்களும் ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன; மேலும் புலனாய்வு நடக்கிறது. அவற்றின் மீது முடிவெடுப்பதற்குப் பதில் ''நீதி''பதிகளின் சட்ட மூளை குறுக்கே பாய்ந்தது. ஊழல் புகார்களை ஓரங்கட்டி வைத்தனர்.

''அவர் நிதிமோசடிகள் செய்தாரோ, இல்லையோ நீதி வழங்குவதில் தவறுகள் செய்ததாக ஆதாரம் எதுவும் கிடையாது. நீதித்துறையில் அல்லாத விவகாரங்கள் எதுவும் அவர் நீதிபதியாய் பணியாற்றுவதைப் பாதிக்காது.'' என்று தீர்ப்பளித்தனர்.

தலைமை ''நீதி''பதி ரங்கநாத் மிஸ்ரா இத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டார். விசாரணையின்போது சம்பளம் மற்றும் சகல வசதிகளுடன் விடுமுறையில் அனுப்பியிருந்த ராமசாமிக்கு மீண்டும் பொறுப்புகளை ஒப்படைத்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த பல நீதித்துறை நிபுணர்களும், உச்ச ''நீதி''மன்ற வழக்குரைஞர் சங்கமும், மறுபரிசீலனை செய்து, நடவடிக்கை எடுக்கும்படி கோரினர்.

இந்தக் கோரிக்கையை உச்ச ''நீதி''மன்றம் நிராகரித்து விட்டது; ஊழல் பெருச்சாளி ராமசாமி ''நீதி''தேவனாக நீடிக்கிறார். ராமசாமியின் மன்றத்தைப் புறக்கணிப்பது என்று இரகசிய வாக்கெடுப்பின் மூலம் வழக்குரைஞர் சங்கம் முடிவு எடுத்துள்ளது. ''என்னவானாலும் அவர் நம்ம நீதிபதி, அவரைக் காப்பாற்றுவது நமது கடமை'' என்று காங்கிரசும் அதன் கூட்டாளிகளும் செயல்படுகின்றனர். ''நீதித்துறையில் ஊழல் பெருச்சாளி'' என்பதாகப் பார்க்காமல், விவகாரத்தை கட்சி அரசியல் ஆக்கி விட்டார்கள்.

''அவர் நிதிமோசடிகள் செய்தாரோ, இல்லையோ நீதி வழங்குவதில் தவறுகள் செய்ததாக ஆதாரம் எதுவும் கிடையாது. நீதித்துறையில் அல்லாத விவகாரங்கள் எதுவும் அவர் நீதிபதியாய், பணியாற்றுவதைப் பாதிக்காது.'' என்று நீதிபதிகளே தீர்ப்பளித்தனர்.

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கூட்டணியினரும் பாரதீய ஜனதாவும் அவற்றின் வழக்கறிஞர்களும், ராமசாமியின் மீது நடவடிக்கை எடுக்கும்படி தீவிரமாகக் கோருகின்றனர். நாடாளுமன்றத்தின் மூலம் ராமசாமியைப் பதவி நீக்கம் செய்வதற்கான நடவடிக்கை கோரி 108 எம்.பி.க்கள் தீர்மானம் கொடுத்துள்ளனர். சபாநாயகருக்கு அதற்கான அதிகாரம் இருக்கிறது. உச்ச''நீதி''மன்ற, உயர்''நீதி''மன்ற தலைமை ''நீதி''பதிகள் இருவரையும், ஒரு வழக்கறிஞரையும் கொண்டு விசாரணைக் கமிட்டி அமைத்து, அதன் தீர்ப்பை நாடாளுமன்றத்தில் வைத்து நிறைவேற்றி, அரசுத் தலைவருக்கு அனுப்பினால் அவர் ராமசாமியைப் பதவி நீக்கம் செய்வார். இந்த விதியையும் கூட அரசுத் தலைவர் மீறலாம்!



இதற்கிடையே ராமசாமியின் முன்புள்ள ஒரு வழக்கை வேறு மன்றத்துக்கு மாற்றும்படி ஒரு வழக்கறிஞர் முறையிட்டார்; அதை நிராகரித்த தலைமை ''நீதி''பதி, ராமசாமி ''நீதி''பதியாக நீடிக்கவும் வழக்கை விசாரித்துத் தீர்ப்பளிக்கவும் தகுதி, அதிகாரம் உடையவர்தான் என்கிறார். ராமசாமிக்கு வக்காலத்து வாங்கி ராஜீவ் - சுப்பிரமணிய சுவாமி கும்பல் முதல் தி.க. வீரமணி வரை பலரும் வாதாடுகின்றனர்.

தமிழரான ராமசாமிக்காக தூக்கில் தொங்கவும் தயார் எனச் சவடால் அடித்த வீரமணி, அவருக்கெதிராக பஞ்சாப் - அரியானா உச்ச ''நீதி''மன்றத்திலுள்ள ஆர்.எஸ்.எஸ்.பார்ப்பன கும்பல் கிளப்பிவிட்ட அவதூறுதான் ஊழல் புகார் என்கிறார்.

வீரமணியின் இதே வாதத்தை வைத்து ராமசாமிக்காக வக்காலத்து வாங்கும் சுப்பிரமணிய சுவாமி, ராஜீவ் காந்தி, அவர்மீது நடவடிக்கை எடுக்க மறுக்கும் அரசுத் தலைவர் வெங்கிடராமன், அவரைக் காப்பாற்றி வரும் தலைமை ''நீதி''பதி ரங்கனாத் மிஸ்ரா, ஆகியோரும் பார்ப்பனர்கள்தான். இந்தப் பார்ப்பனக் கும்பல் இன்னும் ஒருபடி மேலேபோய் ராமசாமிக்காக வாதாடுகிறது.

''பம்பாய் - எஸ்.கே.தேசாய், ஜெய்ப்பூர் - குமன்மால் லோதா, ஐதராபாத் - பாஸ்கரன் - ஆகிய உயர் ''நீதி''மன்ற ''நீதி''பதிகள் மீதுகூட ஊழல், முறைகேடுகள் செய்ததாகப் புகார்கள் செய்தார்கள்; அதற்கு நடவடிக்கை எடுக்காத போது இதற்கு மட்டும் ஏன் நடவடிக்கை'' என்று கருணாநிதி பாணியில் பேசுகின்றனர். இதே ராமசாமியின் மாமனார் சென்னை உயர் ''நீதி''மன்றத்தின் முன்னாள் தலைமை ''நீதி''பதி வீராசாமி; பல ஆண்டுகளுக்கு முன்பு அவர் செய்த ஊழல்களும் இப்போதுதான் உச்ச '''நீதி'' மன்ற இறுதி விசாரணைக்கு வந்துள்ளது. இந்த நிலையில் அதன் கதி எப்படியிருக்கும் என்பதும் தெரிந்ததே!

ஆக, நீதி, நேர்மை, ஒழுக்கம், புனிதம் ஆகிய அங்கியை இனிமேலும், ''நீதி''த்துறை போர்த்திக் கொள்ளப் போவதில்லை. சர்வமயமாகிவிட்ட லஞ்ச ஊழல், முறைகேடுகளுக்கு ''நீதி''த்துறை மட்டும் விதிவிலக்காக எப்படி இருக்கும் என்று பகிரங்கமாகவே அவர்கள் வந்துவிட்டார்கள். வேலியே பயிரை மேய்வது இனிமேலும் இரகசியமாக நடக்காது; அது வேலியின் உரிமையாகிவிடும்!

● மணி



படிப்பகம்

www.padippakam.com




● *சோசலிச நிர்மாணம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற போர்வையின் கீழ் ஸ்டாலின் கிறீமியன் தாத்தார்கள், வோல்கா ஜெர்மானியர், மஸ்கெட்டியர்கள் போன்ற தேசிய இனங்களை ஐரோப்பிய எல்லை பிராந்தியங்களிலிருந்து இடம் பெயர்க்கப்பட்டு சைபீரியப் பனிப்படலப் பிரதேசத்திற்கும் மத்திய ஆசிய பிராந்தியத்திற்கும் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றனர். (ஆதாரம் : தமிழீழ சோசலிசத்தை நோக்கி...) ஸ்டாலின் இவ்வாறு செய்தது எவ்வாறு சரியாகும்?*

**— விசுவநாதன், மதுரை.**

☆ ஸ்டாலின் தலைமையிலான சோவியத் சோசலிச ஒன்றியம் மாபெரும் சோசலிச நிர்மாணப் பணிகளை மேற்கொண்ட எழுச்சிமிகு அந்த ஆண்டுகளைப் பற்றி ருசியர்கள் அல்லாத பல அறிஞர்கள் எழுதியுள்ளனர். இட்லரின் நாஜிப் படையினால் தூக்கிலிடப்பட்ட செக். நாட்டு கம்யூனிஸ்டுத் தலைவர் ஜூலியஸ் பூசிக் ''வீர நினைவுகள்'' எழுதியுள்ளார். ருசியரை மணந்து கொண்டு அங்கேயே குடியேறிய அமெரிக்கப் பத்திரிக்கையாளர் அன்னா லூயி ஸ்டிராங் ''ஸ்டாலின் சகாப்தம்'' எழுதியுள்ளார். இன்னும் பெட்ராண்ட் ரஸ்ஸல், ஜே.டி.பெர்னால், பெட்ரோல்டு பிரக்ட், ஹான்ஸ் ஐசலர், பெரியார் ஈ.வெ.ரா. போன்ற பல அறிஞர்கள், கலைஞர்கள் சோவியத் சோசலிச நிர்மாணம், அதில் ஸ்டாலினது பங்கு குறித்து வியந்து பாராட்டினர்.

கட்சி, அரசு ஆகியவற்றுக்குள்ளும் வெளியேயும் ஒளிந்து கொண்டிருந்த முதலாளித்துவ எதிர்ப்புரட்சியாளர்கள், துரோகிகள், ஏகாதிபத்திய உளவாளிகள் போன்றவர்களின நாசவேலைகள்; ஏகாதிபத்தியப் பொருளாதாரத் தடைகள், யுத்த மிரட்டல்கள், மூலதன - தொழில் நுட்பப் பற்றாக்குறை, பனிப்புயல்கள் போன்ற இயற்கையான இடையூறுகள்; இத்தனையையும் எதிர்கொண்டு அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாடுகள் 100, 150 ஆண்டுகளில் சாதிக்க முடியாத தொழில், விவசாயம், அறிவியல் சாதனைகளை ஸ்டாலின் தலைமையின் கீழ் 30 ஆண்டுகளில் ருசியா கண்டது. நாஜி இட்லரின் யுத்தவெறிக்கு இலக்காகி கோடிக்கணக்கான மக்களையும் சோசலிச நிர்மாணங்களையும் இழந்த பிறகும் உலகமே வியக்கும் வகையில் ஆக்கிரமிப்பாளர்களைப் போரில் வென்று, மிகக் குறுகிய காலத்திலேயே அவற்றை மறுநிர்மாணம் செய்து முடித்தது. ஸ்டாலினது கொடிய எதிரிகள் கூட இந்த உண்மையை மறுக்கவில்லை.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும், மையப்படுத்தப்பட்ட சோசலிச உடமை - உறவு, திட்டமிடுதல் மற்றும் சோவியத் மக்களின் கடும் உழைப்பு - தியாகமின்றி இத்தகைய சோசலிச நிர்மாணத்தை சாதிக்க முடியாது. இதற்கேற்ப மக்களது வாழ்விடம், வாழ்க்கை முறை, சமூக உறவு ஆகியவற்றில் மாறுதல்களைக் கொண்டு வருவதும் தவிர்க்க இயலாது. பெரும்பான்மையான சோவியத் மக்கள் இத்தகைய மாறுதல்களைத் தாமே மனமுவந்து ஏற்றுக்கொண்டு சோசலிச நிர்மாணத்தில் பங்கேற்றனர் என்றுதான் மேற்சொன்ன பல அறிஞர்கள், கலைஞர்கள் எழுதியிருக்கின்றனர். அதே சமயம், இந்த மாறுதல்களை ஏற்க மறுத்த சில சிறுபான்மைப் பிரிவினரும் இருந்தனர். உதாரணமாக விவசாய மக்களைச் சுரண்டிக் கொழுத்திருந்த குலாக்குகள், சோவியத் கூட்டுப் பண்ணைகளை அமைப்பதற்கு எதிராக நின்றனர். கட்சி, அரசுக்குள்ளும், வெளியேயும் ஒளிந்திருந்த ட்ராட்ஸ்கி, புகாரின், ஜினோவிவ் போன்ற எதிர்ப் புரட்சியாளர்களும், துரோகிகளும் இப்படிப்பட்டவர்களின் மூலம் எதிர்ப்புரட்சிக் கலகங்களைத் தூண்டி விட்டனர்.

இப்படிப்பட்ட விவகாரங்களில் ஸ்டாலின் ஓரளவு பலந்தமான முறைகளை மேற்கொண்டார். அதற்குப் பதிலாக பண்பாட்டுப் புரட்சியின் மூலம் வர்க்கப் போராட்டங்களை நடத்தி அவர்களை முறியடித்து, மக்களது எழுச்சியை, முன்முயற்சியைக் கட்டவிழ்த்து விட்டிருக்க வேண்டும் என்று மாவோ, ஸ்டாலினை விமர்சிக்கிறார். இருந்தபோதும் ருசியாவில் சோசலிச நிர்மாணத்தில் ஸ்டாலினது தலைமை மகத்தான பங்காற்றியிருக்கிறது; உலகிலேயே முதன்முறையாக மாபெரும் சோசலிச நிர்மாணப் பணியிலே ஈடுபட்டபோது நேர்ந்த அனுபவக் குறைபாடு காரணமாக இப்படி நேர்ந்தது என்று மாவோ சரியாகவே குறிப்பிட்டுள்ளார்.

● *இன்றைய நிலையில் இளைய தலைமுறையினரைச் சீரழிக்கும் போதைப் பழக்கம், ஆபாசத் திரைப்படங்கள் இவற்றிலிருந்து அவர்களை மீட்டெடுக்க உதவக்கூடிய கட்டுரைகளை வெளியிடுவீர்களா?*

***— பெ.சிவக்குமார், சென்னை-16.***

★ அவசியந்தான். நமது தோழமை ஏடான ''புதிய கலாச்சாரம்'' இந்தப் பணியை மேற்கொண்டுள்ளது. ''புதிய ஜனநாயகம்'' அரசியல், பொருளாதார விவகாரங்களில் முக்கியக் கவனம் செலுத்துவதால் இவை அதிகம் இடம் பெறுவதில்லை.

> அரசியல் சாசனத்தில் நிலைமைக்கேற்ப அவ்வப்போது சில மாற்றங்களைச் செய்வதால் அடிப்படைப் பிரச்சினை தீராது. ஏற்கனவே ஆளுவோரே கூட தமது வசதிக்கேற்ப புதிதாக அடக்குமுறைச் சட்டங்களையும், சில சீர்திருத்தங்களையும் கொண்டு வருகிறார்கள். ஆகவே ஏதோ சில மாற்றங்கள் பயன்படா.

● **உங்கள் கோஷங்களில், ''மார்க்சியம், லெனினியம், மாவோ சிந்தனை ஓங்குக!'' என்கிறீர்களே, ஏங்கெல்ஸ், ஸ்டாலின் எல்லாம் புரட்சிவாதிகள் இல்லையா?**

***— அஜிதா, திருச்சி.***

★ மார்க்சியம், லெனினியம், மாவோ சிந்தனை என்று நாம் கூறும்போது, முறையே மார்க்ஸ், லெனின், மாவோ ஆகியோரைப் பாட்டாளிகளின் தலைவர்கள், புரட்சியாளர்கள் என்கிற தனி நபர்களாகக் குறிப்பிடவில்லை. முக்கியமாக அவர்களால், அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தி, அவர்கள் காலத்தில் உருவாக்கப்பட்ட அரசியல், பொருளாதாரம், தத்துவம் போன்ற துறைகளிலான பாட்டாளி வர்க்க சித்தாந்தக் கட்டமைப்பையே அவ்வாறு குறிப்பிடுகிறோம். ஏங்கெல்சினது பங்களிப்புகளின்றி மார்க்சியமும், ஸ்டாலினது பங்களிப்புகளின்றி லெனினியமும் முழுமை அடைய முடியாது. அப்படி மார்க்சியத்தில் இருந்து ஏங்கெல்சினது படைப்புகளையும், லெனினியத்திலிருந்து ஸ்டாலினது படைப்புகளையும் பிரித்துப் பார்ப்பது இறுதியில் மார்க்சியம், லெனினியத்துக்கே எதிரானதாகி, அவற்றையும் நிராகரிப்பதாகிவிடும். டிராட்ஸ்கியவாதிகளிடமும், அவர்களின் வாரிசுகளான புதிய இடதுகளிடமும் இப்போக்கைக் காணலாம்.

● **கேபிள் டி.வி. எதிர்ப்பு, ஆதரவில் எது சரி? எது தவறு? எது மக்களுக்கு அதிக சேவை செய்யக் கூடியது?**

**— பு.ஜ.வாசகர் வட்டம், சென்னை.**

★ 'கேபிள் டி.வி'யினால், பல கோடி ரூபாய் மூலதனமிட்டுள்ள தாங்கள் பாதிக்கப்படுவோம்; அரசுக்கும் பலகோடி ரூபாய் வருமான இழப்பு ஏற்படும்; பல லட்சம் தொழிலாளர்கள் வேலையிழப்பர்; கேபிள் டி.வி. சட்டவிரோதம், பொய்ப் பிரச்சாரத்தினால் சில சுயநலமிகளால் நடத்தப்படுகிறது — இது சினிமாக்காரர்கள், 'வீடியோ' கடைக்காரர்களின் குற்றச்சாட்டு.

'கேபிள் டி.வி'யினால், சொந்தமாக 'வீடியோ'க்கருவி வாங்க முடியாதவர்களும் குறைந்த செலவில் அவ்வசதி பெறலாம். இது மனித குல முன்னேற்றத்துக்கு மனமகிழ்ச்சிக்கு வசதியான - வள



படிப்பகம்

www.padippakam.com

மான வாழ்க்கைக்கு அவசியமான புதிய தொழில் நுட்பப் புரட்சி; இதனாலும் பலருக்குப் புதிதாக வேலை கிடைப்பதோடு, சினிமா மட்டுமல்லாது அறிவியல், கல்வி மற்றும் பிற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும் காணலாம் — இது 'கேபிள் டி.வி'க் கம்பெனிகளின் பதில்.

சில லட்சம் ரூபாய் போட்டு, பல நூறு கோடி ரூபாய் மதிப்புடைய 'லார்சன் அண்டு டுப்ரோ' கம்பெனியைக் கைப்பற்றும் திருபாய் அம்பாணி கூட 'கூட்டுப்பங்குக் கழக ஜனநாயகம்' பேசுகிறார். அதுபோல இவ்விரு கொள்ளைக்காரர்களும், தமது சுய நலன்களுக்காகப் போடும் சண்டையில் ஏதோ மக்கள் நலனும், நியாயமும் இருப்பதாக வாதிடுகிறார்கள். 'கேபிள் டி.வி.' என்பதில் ஏதோ தொழில் நுட்ப முன்னேற்றம் - புரட்சி என்கிறார்களே அது உண்மையல்ல. ஒரு இடத்தில் இசைத்தட்டை சுழலவிட்டு தெருவெல்லாம் ஒலிபெருக்கிக் குழாய் கட்டி பாட்டுப் போடுகிறார்களே அப்படி ஒரு 'வீடியோ' கருவியை வைத்து பல வானொளிப் பெட்டிகளுக்கு இணைப்புக் கொடுப்பதுதான். இதனால் ஒரு 'வீடியோ' கருவி, ஒரு ஒளி - ஒலி நாடாவை வைத்து ஒரே சமயத்தில் பல வானொளிப் பெட்டிகளில் பலர் ஒரே நிகழ்ச்சியைக் காணலாம் என்பதுதான் முன்னேற்றம்.

சினிமா, வானொளி, 'வீடியோ' 'கேபிள் டி.வி.' ஆகியன மக்கள் திரள் தொடர்புச் சாதனங்களில் ஏற்படும் முன்னேற்றம். ஆனால், இச்சாதனம் மக்களைப் பண்பாட்டுச் சீரழிவில் தள்ளிக் கொள்ளையிடும் சுய நலக்காரர்களிடம் சிக்கிக் கேடாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதுதான் உண்மை. சினிமா கொட்டகை மூலமானாலும் சரி, 'கேபிள் டி.வி' மூலமானாலும் சரி நடப்பது என்னவோ சினிமா போதை வியாபாரம்தான். இரண்டிலுமே மக்கள் சேவை என்பது மருந்துக்கும் கிடையாது. ஆனால், 'கேபிள் டி.வி' வளருமானால் 'அரசாங்க டி.வி'யின் ஏகபோகம் குறையும். இது துணை விளைவுதான். 'வீடியோ' வந்தபோது சினிமாக்காரர்கள் எதிர்த்தார்கள்; இப்போது வீடியோ கடைக்காரர்களோடு 'கேபிள் டி.வி.'யை எதிர்க்கிறார்கள். தமக்குரிய பங்கு கிடைத்ததும் 'வீடியோ'க்காரர்களிடம் சினிமாக்காரர்களே ஒப்பந்தம் போட்டுக் கொண்டார்கள். அதே போல 'கேபிள் டி.வி'க்காரர்களிடமும் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு விடுவார்கள். இதற்கான சட்டத்தையும் அரசு கொண்டு வந்துவிடும்.

> மார்க்சியத்தில் இருந்து ஏங்கெல்சினது படைப்புகளையும், லெனினியத்திலிருந்து ஸ்டாலினது படைப்புகளையும் பிரித்துப் பார்ப்பது இறுதியில் மார்க்சியம், லெனினியத்துக்கே எதிராகிவிடும்.

● **"வருணாசிரம, சாதிமத, பார்ப்பன சனாதன ஆதிக்கச் சின்னங்களை - வழக்கங்களை அவமானங்களாகக் கருதி ஒழிக்க வேண்டும். அதற்கான இயக்கத்தின் ஒரு பகுதியாகத் தான் ம.க.இ.க. சமஸ்கிருத எதிர்ப்பு இயக்கம் நடக்கிறது. அது சரியானதுதான்" என ஒரு வாசகரின் வினாவிற்கு விடை அளித்தீர்கள்.**

**ஆனால், தங்களின் இதழின் பெயரோ - 'புதிய ஜனநாயகம்' இதில் உள்ள 'ஜன' என்பது வடமொழிதானே; அதை மட்டும் ஏன் உங்களால் நீக்க முடியவில்லை?**

— *இரா.வைத்தீசுவரன், நெல்லிக்குப்பம்.*

★ 'புதிய ஜனநாயக'த்தில் 'ஜன' மட்டுமல்ல; நாயகம் கூட வடமொழிச் சொல்தான். முழுமையான சரியான பொருள் தரக்கூடியதாகவும் மக்கள் வழக்கத்தில் புழங்குவதும் "ஜனநாயகம்" என்கிற முறையில்தான், இதை வைத்துள்ளோம். தமிழ்த் தூய்மைவாதம் பேசுபவர்களைத் தவிர திராவிட, தமிழ் இயக்கத்தவர்கள் அனைவரும் இதுபோல் பல சொற்களைப் பயன்படுத்துகின்றனர். சரியான வேர்ச் சொற்கள் கிடைத்தால், மக்கள் புழக்கத்துக்கு எளிமையாக இருந்தால் அதற்கே முன்னுரிமை தரவேண்டும். ஆனால், நாம் தமிழ்த் தூய்மை வாதத்தை ஏற்கவில்லை. வளர்ச்சிப் போக்கில் தேவையை ஒட்டி புதியவைகளைப் பல மொழிகளில் இருந்தும் எடுத்துக் கொள்வதில் தவறில்லை.

இல்லையானால், மொழி வளர்ச்சியின்றி மற்ற பிற முன்னேற்றங்களுக்கும் தடையாக இருக்கும். சமஸ்கிருத மயமாக்கல் எதிர்ப்பு இயக்கத்தைப் பொறுத்தவரை, அது அரசியல், பண்பாட்டு நிறுவன ஆதிக்கத்துக்காக திணிக்கப்பட்டு வருவதோடு மற்ற பிற பெரும்பான்மை மக்களை அவமானப்படுத்தும் வகையில், பயன்படுத்தப்படுகிறது - என்பதால், நடத்தப்படுவது அவசியம் என்கிறோம்.

● ***இந்திய அரசியல் சாசனம் சதிகாரர்களின் சூழ்ச்சியின் அரங்கேற்றம். அது '47க்குரிய இந்தியாவைச் சீரழிக்க, 1935-ஆம் வருடம் வெள்ளையன் விதித்த விதி. இந்தியாவின் ஏழ்மைக்கும் முதலாளிகளின் ஆட்சி பீட நாடகத்திற்கும் காரணம் நம் அரசியல் சாசனமே. நாடு மாறிக் கொண்டிருக்கும் வேகத்திற்கு அரசியல் சாசனமும் மாற்றப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்; இவை என் கருத்துக்கள். தங்கள் கருத்து என்ன?***

— *எம்.பாண்டித்துரை, மதுரை-9.*

★ இப்போது இந்தியாவில் நாம் அனுபவிக்கும் அடக்குமுறை, சுரண்டல், அவலத்துக்கான முக்கியக் கருவிகளில் ஒன்று 1935-இல் வெள்ளையன் கொண்டுவந்த அரசியல் சாசனத்தின் மறுபதிப்பைத் தொடர்வதாகும். ஆனால் இதைவிட முக்கியமானது இந்தியத் தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் பிரதிநிதிகளான காங்கிரசும், முஸ்லீம் லீக்கும் இந்தியச் சுதந்திரப் போராட்டத்துக்கு துரோகமிழைத்து ஏகாதிபத்தியவாதிகளுடன் சமரசம் செய்து கொண்டு அரசியல் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொண்டார்கள். அதிகார வர்க்கம், இராணுவம், போலீசு, நீதித்துறை, சிறைத்துறை போன்றவை அடங்கிய அரசியல் அமைப்பும்; ஆலைகள், நிலங்கள், வியாபாரம் முதலிய பொருளாதார அமைப்பும்; போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்ற அவற்றுக்கான வலைப் பின்னலும் அவர்கள் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்தி இயக்கவும் பாதுகாக்கவும் ஏற்பட்டதுதான் அரசியல் சாசனம்.

இந்த அரசியல் சாசனத்தில் நிலைமைக்கேற்ப அவ்வப்போது சில மாற்றங்களைச் செய்வதால் அடிப்படைப் பிரச்சினை தீராது. ஏற்கனவே ஆளுவோரே கூட தமது வசதிக்கேற்ப புதிதாக அடக்குமுறைச் சட்டங்களையும், சில சீர்திருத்தங்களையும் கொண்டு வருகிறார்கள். ஆகவே ஏதோ சில மாற்றங்கள் பயன்படா. இந்த ஆளும் வர்க்கங்கள், அவற்றின் பிரதிநிதிகளான ஆளும் கட்சிகள், அரசியல் சாசனத்துடன் கூடிய எல்லா அரசியல் - பொருளாதார அமைப்புமே தூக்கியெறியப்பட வேண்டும். அதன்மூலம் தான் புரட்சிகர மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

● ***போலிக் கம்யூனிஸ்டுகள் பாராளுமன்ற சாக்கடையில் வீழ்ந்த பின்புதான் சீரழிந்தார்கள் என்பதுபோல் எழுதி வருகிறீர்கள். அதற்கு முன்பு அவர்களின் கண்ணோட்டம் சரியானதாக இருந்ததா?***

— *பெ.சிவக்குமார், சென்னை-16.*

★ அப்படியில்லை. ஆரம்பத்தில் இருந்தே இந்திய மக்களைப் புரட்சிக்கு வழிநடத்தும் மார்க்சிய - லெனினிய அடிப்படையிலான கட்சித் திட்டம், அரசியல் - இராணுவ யுத்த தந்திரங்கள், செயல் தந்திரங்கள், பாட்டாளி வர்க்கப் பண்புடன் கூடிய கட்சி அமைப்பு, இவற்றைக் கொண்ட புரட்சிகர இயக்கம் போலிக் கம்யூனிஸ்டுகளிடம் கிடையாது. இப்போது பல போலிப் புரட்சிக் குழுக்கள் அம்பேத்கார் - பெரியார் இயக்கங்களை அரசியல் - சித்தாந்த ரீதியில் எதிர்கொள்ளத் துணியாது வால்பிடித்துச் செல்வதைப் போல் ஆரம்பத்திலிருந்தே காங்கிரசு - காந்தீய - பார்ப்பனத் தலைமையைப் போலிக் கம்யூனிஸ்டுகள் வால் பிடித்துச் செல்கின்றனர். இவைதான் இவர்களின் சீரழிவுக்கு முக்கியக் காரணம். இந்தப் போக்கில் இருந்து விடுபட்டுப் புரட்சிப் பாதையை மேற்கொள்வதற்கான வாய்ப்பு - போராட்டம் தெலுங்கானாப் புரட்சியின்போது வந்தது. இப்போது போலிப் புரட்சியாளர்கள் கூறுவதைப் போலவே 'இடது' சந்தர்ப்பவாதம், குறுங்குழுவாதம், வறட்டுத்தனம் ஆகியவற்றை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு அப்போது போலிக் கம்யூனிஸ்டுகள், நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்று "தேசிய" நீரோட்டத்தில் கலப்பதாக நேரு - வல்லபாய் பட்டேல் கும்பலிடம் எழுதிக் கொடுத்து சரணடைந்தனர். அது முக்கியமானதொரு திருப்புமுனை என்பதைத்தான் சிறப்பாகக் குறிப்பிடுகிறோம்.

> சினிமா கொட்டகை மூலமானாலும் சரி, 'கேபிள் டி.வி' மூலமானாலும் சரி, நடப்பது என்னவோ சினிமா போதை வியாபாரம்தான்.



படிப்பகம்

www.padippakam.com

# மேட்டுக்குடி கும்பலின் குறுக்குவழி திறமை!

**அமைச்சர்கள், அதிகாரிகள், நீதிபதிகள் உட்பட பல மேல்சாதி - மேட்டுக்குடியினர் தங்கள் பிள்ளைகளை போலி மதிப்பெண் பட்டியல் மற்றும் பல போலி சான்றிதழ்களைக் காட்டியே டில்லி பல்கலைக்கழக கல்லூரிகளில் சேர்த்துள்ளார்கள். இதில் பல மேல்சாதியினர் தாழ்த்தப்பட்ட/ பழங்குடி சாதிச் சான்றிதழ்களை லஞ்சம் கொடுத்து வாங்கி பயன்படுத்தியதே அதிகம்!**

''மேல்சாதி பிள்ளைக அறிவாளிக, திறமைசாலிக, ஒழுக்கமானதுக! அதனால்தான் அதுக நிறைய மார்க் வாங்கி மேல்படிப்பு படிக்குதுக! ஆபீசராக, கலெக்டராக, போலீசு அதிகாரியாக போகுதுக''

நம்மிடையே பலர் இன்னும் இப்படித்தானே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்? நம்பிக்கொண்டு இருக்கிறார்கள்?!

ஆனால், மேல்சாதி மேட்டுக்குடி கும்பல் அதிகாரம், லஞ்ச லாவண்யம், சாதிய செல்வாக்கு, ஒழுக்கக் கேடுகள், முறைகேடுகளைப் பயன்படுத்தித்தானே, கல்வி பெறுகிறார்கள்; உயர் பதவி பெறுகிறார்கள்?!

ஏன் ராஜீவ் காந்தியே தனது மர மண்டை பிள்ளை ராகுல்காந்திக்கு 1989ல் 'துப்பாக்கிச் சுடுவதில் வல்லவன்' என்ற போலிச் சான்றிதழ் மூலம்தானே கல்லூரியில் சேர்த்தார்? பிரதமர், அமைச்சர், எம்.எல்.ஏ. முதல் நீதிபதி, போலீசு கமிஷனர், அதிகாரி, வியாபாரி, முதலாளிவரை அனைவரும் இப்படித்தான் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்கிறார்கள்! இதோ அண்மையில் வெளிவந்த சில சான்றுகள்!




டில்லி பல்கலைக்கழக - ராம்ஜாஸ் கல்லூரியின் மாணவர் சேர்க்கையில் குடிபெயர்வோருக்குரிய ஒதுக்கீட்டுப் பட்டியலில் 27வது இடத்தில் இருந்தாள் நீலம் திவாரி! இவள் முன்னாள் காங்கிரசு அமைச்சர் கே.கே.திவாரியின் மகள்! கல்லூரி தகுதிப்படி 21 பேர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்! ஆனால், நீலம் திவாரியும் முறைகேடாக இந்த 21 பேரில் ஒருத்தியானாள்! இந்திய மருத்துவ கவுன்சில் மூலம் போலிச் சான்றிதழ் பெற்று தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி மகளுக்கு 'சீட்' வாங்கினார் திவாரி!

இதேபோல் டில்லி சட்டக் கல்லூரியில் போலி மருத்துவச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், விளையாட்டுச் சான்றிதழ் மூலம் பலர் சேர்ந்துள்ளனர். இப்படி சட்டவிரோதமாக படித்து வருபவர்களின் பட்டியலில் 'சுப்ரீம் கோர்ட்' நீதிபதி லலித் மோகன் சர்மா, துணை போலீசு கமிஷனர் கமல் காந்த் வியாஸ் ஆகியோரது பிள்ளைகளும் இடம் பெற்றுள்ளனர்.

இப்படி சுமார் 1000 பேர் டில்லி பல்கலைக்கழக கல்லூரிகளில் படித்து வருகிறார்கள். பல்கலைக்கழக நிர்வாகம் அரசியல்வாதிகள், மேலதிகாரிகள் மற்றும் முக்கியப் புள்ளிகள் தரும் நெருக்கடியால் சட்டவிரோதமாக மேட்டுக்குடி மாணவர்களை அனுமதித்துக் கொள்கிறது. ஒரு சில மட்டுமே கண்டுபிடிக்கப்பட்டன; அவற்றிலும் சில மட்டுமே வெளிவந்தன.



டில்லி ராம்ஜாஸ் கல்லூரியின் மாணவன் தீபின் ஒபெராய்! பள்ளி இறுதி வகுப்பில் 78.25 சதவிகித மதிப்பெண் பெற்றதாகவும் மதிப்பெண் பட்டியல் தன்னிடம் இல்லாததால் பெற்றுத் தரும்படியும் கோரி முதல்வருக்கு மனு கொடுத்தான்! கல்லூரி முதல்வரும் அவன் படித்த கேம்ப்ரிட்ஜ் சீனியர் பள்ளி முதல்வருக்கு கடிதம் எழுதுகிறார்! ஒபெராய், பள்ளி இறுதி வகுப்பில் 47.4 சதவிகித மதிப்பெண் மட்டுமே பெற்றிருப்பதும், போலிச் சான்றிதழ் மூலம் கல்லூரியில் 'பி.காம் ஹானர்ஸ்' படிப்பில் சேர்ந்த உண்மையும் வெளிவந்தது!

இன்னொரு மாணவன் ராமன் சர்மா! டில்லி பாஹார் கஞ்ச் பகுதியில் உள்ள செயிண்ட் ஆண்டனி பள்ளியில் படித்தவன்! 12-ம் வகுப்பு தேறாதவன்! ஆனால் ஜவஹர்லால் இண்டர்மீடியட் கல்லூரியில் படித்து தேறியவனாக கூறும் போலி மதிப்பெண் பட்டியல் மூலம் கல்லூரியில் படித்து வருவதும் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் இவன், மதிப்பெண் பட்டியலை 400 ரூபாய்க்கு வாங்கிய செய்தி வெளிவந்தது!

இந்திரஜித் சிங் என்ற மாணவனும் பள்ளி இறுதிவகுப்பில் தோல்வியடைந்தவன்! 68.7 சதவிகித மதிப்பெண் பெற்று வெற்றி பெற்ற சான்றிதழுடன் இதே கல்லூரியில் படித்து வருகிறான்.

ராம்ஜாஸ் கல்லூரியில் மட்டும் இப்படி 28 பேர் போலிச் சான்றிதழ்கள் பெற்று படித்து வருவது கண்டுபிடிக்கப்பட்டது. இம்மாணவர்களை நீக்கிய முதல்வர் ராஜேந்திர பிரசாத்தை போலிச் சான்றிதழ் கும்பல் மிரட்டி பதவி விலக வைத்தது. ''மாணவர் சேர்க்கை விண்ணப்ப படிவத்தில் பாதியளவுதான் என்னால் சோதிக்க முடிந்தது. மீதியை சோதிப்பதற்குள் நிர்வாகத்தினர் (மிரட்டல் வந்ததால்) என்னை தடுத்து விட்டனர்'' என்கிறார் ராஜேந்திர பிரசாத்!

இக்கல்லூரியின் மாணவர் சங்கத் தலைவன் ராஜேஸ் தியாகி மற்றும் ஷாகீத் இக்பால், பாரத்லால் போன்றவர்களே போலிச் சான்றிதழ்கள் வழங்கும் முக்கியப் புள்ளிகள்! பல்கலைக்கழக நிர்வாகத்துடனும் அரசியல்வாதிகள், உயர் போலீசு அதிகாரிகள், நீதிபதிகளுடனும் கள்ளக்கூட்டு வைத்துக் கொண்டு தொழிலை சுத்தமாக நடத்தி வருகிறார்கள்! இவர்கள் பின்னே ராமன் சர்மா, தினேஷ் திவாரி, ஓம்பிரகாஷ், அதுல் சந்தில்யா, சஞ்சீவ் குமார் முதலான ஒரு மாணவர் பட்டாளமே செயல்பட்டு வருகிறது! ராமன் சர்மா கட்டுகட்டாக நன்னடத்தை - விளையாட்டு - தாழ்த்தப்பட்ட/ பழங்குடிச் சாதிச் (SC/ST) சான்றிதழ்களுடனும் பல பள்ளி - கல்லூரி முத்திரைகளுடனும் கைது செய்யப்பட்டான். சான்றிதழ்களை ஆய்வு செய்ய தொடங்கிய உடனே முக்கியப் புள்ளிகள் 'முன் ஜாமீன்' வாங்கி வைத்துக் கொண்டனர்! இவர்களிடம் 8000 ரூபாய் முதல் 12000 வரை கொடுத்து போலிச் சான்


படிப்பகம்

www.padippakam.com

றிதழ்களை வாங்கியதாக ஒத்துக் கொண்டான் கைது செய்யப்பட்ட இன்னொரு மாணவன் சஞ்சீவ் குமார்!

இன்னொரு கல்லூரி, ஸ்ரீராம் வணிகவியல் கல்லூரி! வெளிநாட்டு மாணவர்களுக்குரிய 'கோட்டா'வில் சேர்ந்த் மாணவர்களிடம் கல்லூரியின் விரிவுரையாளர் டாக்டர் விஜய் குமார் கௌல் மற்றும் அலுவலக உதவியாளர் சுரேஷ் கார்க் ஆகியோர் பணம் கேட்டிருக்கிறார்கள்! கென்யாவைச் சேர்ந்த அம்மாணவர்கள் 10,000 ரூபாய் கேட்டதாக கல்லூரி முதல்வருக்கும், தாளாருக்கும் புகார் செய்யவே விஷயம் வெளிவந்தது! மேலும் இக்கல்லூரியில் பலர் போலி சாதிச் சான்றிதழ்கள் மூலம் படித்து வருவதும் கண்டுபிடிக்கப்பட்டது.

அடுத்து சட்டக்கல்லூரி! இத்தகைய அதிகார முறைகேடுகள் - போலிச் சான்றிதழுக்கு புகழ்பெற்று விளங்குகிறது. சட்டத்துறை மாணவர் சேர்க்கையில் 1990-ஆம் ஆண்டு மட்டும் 689 பேரில் 80 பேர் போலிச் சான்றிதழ் பேர்வழிகள்! எண்ணற்ற சேர்க்கை மனுக்கள் தகுதியில்லை என திருப்பி அனுப்பப்பட்டவை! அத்தனையும் அரசியல்வாதிகள், பல உயரதிகாரிகள், முக்கியப் புள்ளிகள் ஆதரவுடன் தகுதியானவை என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன! இத்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் டாக்டர் சுரேந்திர பிரசாத் மற்றும் சில கல்லூரி நிர்வாகத்தினரும் இவற்றிற்கு உடந்தை! போலிச் சான்றிதழ் பேர்வழிகளை கண்டுபிடிக்க உதவ மறுத்து வந்ததால் ஆத்திரமடைந்த மாணவர்கள் ஒருமுறை சுரேந்திர பிரசாத்தை கெரோ செய்தனர்!

மேல்சாதி - மேட்டுக்குடி குலக்கொழுந்துகள் பெற்ற போலிச் சான்றிதழ்களில் தாழ்த்தப்பட்ட - பழங்குடியினர் (SC/ST) சாதிச் சான்றிதழ்களே அதிகம்! டில்லி 'தீஸ் ஹசாரி' பகுதியில் உள்ள கோர்ட்டில் இச்சான்றிதழ் வழங்குவதற்கு பலர் தரகர்களாக செயல்படுகிறார்கள்! இவர்களிடம் பணம் கொடுத்தால் வேண்டிய சாதியில் நீதிபதி கமிஷனர் கையெழுத்து உட்பட அனைத்து அரசு முத்திரைகளுடனும் சான்றிதழ் எளிதாக கிடைக்கும்! போலிச் சாதிச் சான்றிதழ்களில் 20 பேர் டில்லி பல்கலைக் கழகத்தில் படித்து வருவதையும், டில்லி கோர்ட்டில் போலிச் சான்றிதழ்கள் தருவதையும் ஆதாரங்களுடன் முன்வைத்து சி.பி.ஐ. (CBI) விசாரணை நடத்தும்படி கோருகிறார் பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் விஜய் கௌல்!

மண்டல் கமிஷன் - இடஒதுக்கீட்டுக்கு எதிராக எவ்வளவு பெரிய கூச்சல் போட்டது இம்மேல்சாதி - மேட்டுக்குடி கும்பல்? 'பைத்தியக்காரர்கள், பிச்சைக்காரர்கள், கொள்ளைக்காரர்கள் எல்லாம் இடஒதுக்கீடு கேட்கிறார்கள்' என சித்திரம் தீட்டியதே! பிற்படுத்தப்பட்ட - தாழ்த்தப் பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்தால் கல்வியின் தரமே போய்விடும், நாடே குட்டிச் சுவராகிவிடும் என அலறியதே! ஆனால், படிப்பு - பதவி - சுகம் என்றால் அனைத்தும் துறந்து அதே சாதியச் சலுகைகளையும் கேடாகப் பயன்படுத்தவும் தயங்கவில்லையே?! இக்கும்பலை எதனோடு ஒப்பிட்டு நாம் இழிவுபடுத்துவது? ஒப்பீடு செய்வதல்லவா இழிவுபடும்?!

● ராசு




# சி.ஐ.டி.யு. மாநாடு கேளிக்கைத் திருவிழா

கடந்த பிப்ரவரியில் கல்கத்தாவில் 5 நாட்களுக்கு 'மார்க்சிஸ்ட்' கட்சியின் தலைமையிலுள்ள சி.ஐ.டி.யு.வின் தொழிற்சங்க மாநாடு கோலாகலமாக நடந்தது. பளபளப்பான பல வண்ணப் போஸ்டர்கள், அலங்கார வரவேற்பு வளைவுகள், கண்காட்சி, கட்-அவுட்டுகள் என பல லட்சக் கணக்கில் வாரியிறைத்து ஆடம்பர விழாவாக இம்மாநாட்டை நடத்தியது சி.ஐ.டி.யு. ''இது தொழிலாளர்களின் திருவிழா'' என்று நியாயப்படுத்திப் பேசினார், மே.வங்க போக்குவரத்து மந்திரி. சுற்றுலா போல மாநாட்டுக்கு வந்தவர்களுக்கு வசதியாக மாநாட்டு அரங்கத்திலேயே பல்வேறு நுகர்பொருள் கடைகளை அமைத்திருந்தனர். போதாக்குறைக்கு ''வீடியோ பார்லர்'' கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனாலும், எதிர்பார்த்த அளவுக்கு கூட்டம் வரவில்லை. ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பு சி.ஐ.டி.யு. தொடங்கப்பட்டபோது திரண்ட அளவுக்குக்கூட கூட்டம் இல்லாததைக் கண்டு தலைவர்களே முகம் சுளித்தனர். இருப்பினும், 23 லட்சம் உறுப்பினர்களைக் கொண்டு 224 யூனியன்களில் வேர்விட்டுப் பரவி 5 மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளதாக கம்ப்யூட்டர் கணக்கு போட்டுக் காட்டி மாநாட்டுக்கு வந்தவர்களைப் பிரமிப்பூட்டினர்.

மே.வங்கத்தில் 1988ல் மட்டும் 194 கதவடைப்புகளும் 1,46,804 தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டதைப் பற்றியும் மாநட்டில் யாருமே வாய் திறக்கவில்லை. வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துவிட்டு காத்திருக்கும் 5 லட்சம் வேலையில்லா இளைஞர்களைப் பற்றி யாரும் மூச்சே விடவில்லை. குறிப்பிடும்படியாக எதுவும் செய்யவில்லை என்பதாலோ என்னவோ, 1977க்குப் பிறகு சி.ஐ.டி.யு. நடத்திய போராட்டங்களைப் பற்றி எவ்வித செய்தியும் படமும் கண்காட்சியில் இடம் பெறவில்லை.

''தொழிலாளர்கள் வரம்பு மீறிப் போராடக் கூடாது. பொறுப்புணர்வு மிக்க தொழிற்சங்கம்தான் இன்றைய தேவை. தொழிலாளிகள் கடின உழைப்பையும் உற்பத்திப் பெருக்கத்தையும் நோக்கமாகக் கொள்ள வேண்டும்'' என்று மாநாட்டில் 'மார்க்சிஸ்டு' தலைவர்கள் முதலாளிகளுக்குச் சாதகமாக தொழிலாளர்களிடம் உபதேசித்தனர். இப்படி, முதலாளிகள் இட்ட பிச்சையை ஏற்றுக் கொண்டு தொழிலாளிகள் அமைதியாக இருந்த போதிலும், மே.வங்கத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இன்றுவரை 98% வேலையிழப்பும் ஆட்குறைப்பும் முதலாளிகள் நடத்திய கதவடைப்பினால்தான் ஏற்பட்டது என்ற உண்மையை வசதியாக மறைத்து விட்டனர்.

நடந்து முடிந்த இம்மாநாட்டில், போராட்ட அனுபவங்களைத் தொகுத்து தொழிலாளி வர்க்கத்தைப் புரட்சிப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டமோ, தொழிலாளி வர்க்கத்தையும் நாட்டையும் அச்சுறுத்தும் பாசிச அபாயத்தைப் பற்றியோ, அதை முறியடிப்பதற்கான குறிப்பான திட்டமோ, அறைகூவலோ எதுவுமில்லை. தொழிலாளி வர்க்கத்தை மீண்டும் தொழிற்சங்கவாத - பொருளாதார புதைசேற்றில் மூழ்கடிக்கும் திரிபுவாத செக்குமாட்டுப் பாதையில் சென்றதைத் தவிர இம்மாநாடு புதிதாக எதையும் சாதிக்கவுமில்லை.



படிப்பகம்

www.padippakam.com



# பின்னி ஆலைத் தொழிலாளர் வாழ்க்கையோடு விளையாடும் உடையார்

**108 ஆண்டுகள்.** பல ஆயிரம் தொழிலாளர்கள் தலைமுறை தலைமுறையாய் உழைத்து உருவாக்கிய நிறுவனம் 'பின்னி' எனப்படும் பக்கிங்காம் கர்நாடிக் ஆலைகள். நாட்டிலே பழம் பெரும் நெசவாலை நிறுவனங்களில் ஒன்றான இந்தப் பின்னி ஆலைகள் இறுதியாக இழுத்து மூடப்படும் - இல்லைஇல்லை இடித்து தரை மட்டமாக்கப்படும் ஆபத்து நெருங்கிவிட்டது.

பாலூட்டி வளர்க்கும் தாயின் மார்பகங்களையே கடித்து ரத்தம் குடிக்கும் அரக்கர்களாக அடுத்தடுத்து வந்த பின்னி ஆலைகளின் முதலாளிகள் கொள்ளையிட்டனர். இதற்குத் துணை போனார்கள், அடுத்தடுத்து வந்த தொழிற்சங்கத் தரகர்களான துரோகத் தலைவர்கள். இதனால்தான், பின்னி ஆலைகள் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டது.

15 ஆண்டுகளுக்கு முன்பு கோவை லட்சுமி ஆலைகளின் முதலாளி பின்னி நிறுவனத்தைக் கைப்பற்றினார். பின்னி நிறுவனத்துக்கே சொந்தமான சாயக்கலவை நுட்பங்களையும், இயந்திரங்களையும் அவர் கடத்திக் கொண்டு போனதோடு தனது சொந்த ஆலைகளுக்காக பின்னி நிறுவனத்தை சூறையாடி விட்டார்; அப்போதிருந்தே இது நலிவடைந்துவிட்டது என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

1976ல் கோவை லட்சுமி ஆலைகள் முதலாளி ஜி.கே.தேவராஜுலு பின்னியின் தலைவராக இருந்த போது பெய்த பெருமழை பின்னி ஆலைகளுக்குள் புகுந்து ஏழரைக் கோடி ரூபாய் வரை நட்டமேற்பட்டது என்றார். அதைக்காட்டி ஆலைகளைக் கதவடைப்பு செய்து விட்டார். அரசு வங்கியிடமிருந்து 4 கோடி ரூபாய் கடன் பெற்றுக் கொண்டு ஆலையைத் திறந்தார்.

அப்போது, தொழிலாளர் துறை இணைக் கமிசனர், மத்திய - மாநில அரசுடமை ஆலைகளின் பிரதிநிதிகள் அடங்கிய நிபுணர் கமிட்டி அமைக்கப்பட்டது. அது ஆலைகளின் தவறான செயற்திறன், பங்குத் தொகைகளைக் கேடாக நிர்வகிப்பது ஆகியவை காரணமாகத் தான் பின்னி நிறுவனம் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது என்று கூறியது. கோவை, பல்லடம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள தனது ஆலைகளைத் திறமையாக நிர்வகித்துப் பலகோடி ரூபாய் லாபம் ஈட்டி விரிவு படுத்தும் லட்சுமி மில் முதலாளி வேண்டுமென்றே பின்னி மில்லை சூறையாடுவது தெரிந்தது.

ஆனால், அடுத்த 5 ஆண்டுகளில் இருபத்தி நாலரைக் கோடி ரூபாய் நட்டமாகிய' தெனக் கூறி 1981ல் மீண்டும் கதவடைப்பு செய்தார்கள். ஆறுமாதம் இழுத்தடித்து, 3500 தொழிலாளர்கள் வேலையைப் பறித்து, வேலைப் பளுவை ஏற்றி, சம்பள முடக்கம் செய்து பின்னர் ஆலையைத் திறந்தார்கள். அப்போது, தேவராஜுலுவிடம் இருந்து பங்குகளை வாங்கிய மத்திய நிதி மந்திரி பிரணவ முகர்ஜியின் கூட்டாளியான எஸ்.என்.ஹடா பின்னிக்குள் நுழைந்தார். அவர் நிர்வாகப் பொறுப்பேற்ற தலைவராகவும் தொழில் வளர்ச்சி வங்கிப் பிரதிநிதி நிர்வாகியாகவும் இருந்தார். கம்பெனியைக் கட்டுப்படுத்துவதில் பங்கு முதலாளிகளிடையே போட்டி நடந்து கொண்டிருந்த போதே, காங்கிரசின் தொழிற் சங்கப் பழம் பெருச்சாளி அந்தோணி பிள்ளை முதலாளிகளுக்குத் துணைபோகும் வகையில் வேலையை நிறுத்த அறிக்கை கொடுத்தார். அவரும் ஒரு பங்கு முதலாளி என்பது முக்கியமானது.

**பாலூட்டி வளர்க்கும் தாயின் மார்பகங்களையே கடித்து ரத்தம் குடிக்கும் அரக்கர்களாக அடுத்தடுத்து வந்த பின்னி ஆலைகளின் முதலாளிகள் கொள்ளையிட்டனர்.**

இதையே சாக்காக வைத்து 1984 ஜனவரியில் ஆலை மூடப்பட்டது. ஆலை நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்காக பிரிட்டனின் இஞ்சுகேப் பிரபுவிடமிருந்து 19 சதவிகித பங்குகளை வாங்குவதற்கு ஹடா முயன்றார். தொழிலாளர்கள் கடுமையாக எதிர்த்த போதும், பிரணவ முகர்ஜியின் ஆதரவோடு அரசு அனுமதி பெற்று ஹடாவே அப்பங்குகளை வாங்கி நிர்வாகத் தலைவரானார். பத்துமாதக் கதவடைப்புக்குப் பிறகு தொழிலாளர் மீது மேலும் சம்பள வெட்டு, சம்பள முடக்கம், வேலைப்பளு ஏற்றி, துரோக ஒப்பந்தம் திணிக்கப்பட்டு பின்னி ஆலை திறக்கப்பட்டது.

நவீனப் படுத்தாமல், தொழில் போட்டியில் நிற்கவோ, லாபம் ஈட்டவோ முடியாத நெருக்கடியில் பின்னி ஆலை சிக்கியது. தான் துளிகூட புதிய மூலதனமிடாது கடன் வாங்கவே ஹடா முயன்றார். அதே சமயம் தொழிற்சங்கத் தரகர் இரா.குசேலன் பல துரோக ஒப்பந்தங்களைப் போட்டு ஹடாவுக்கு ஊழியஞ் செய்தார்.

**பின்னி மில்லில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைப்** பார்த்த எம்.ஜி.ஆரின் பினாமி சாராய உடையார் எனப்படும் என்.பி.வி. ராமசாமி உடையார் ஹடாவின் பங்குகளை 1987ல் விலைக்கு வாங்கினார். இப்போதும் 24 சதவிகிதமே பங்குகள் வைத்துள்ள சாராய உடையாரின் பிரதிநிதி அவரது கூட்டாளி எம்.எத்துராஜன்தான் பின்னியின் நிர்வாகத் தலைவர். வேறு சில உள் நோக்கங்களை வைத்துத்தான் சாராய உடையார் பின்னிக்குள் நுழைந்திருக்கிறாரே தவிர, அதைத் தொடர்ந்து திறனோட நடத்துவதற்காக அல்ல என்று இப்போது தெரிகிறது.

பின்னி மில்லுக்கு, பெங்களூர் கம்பளி மற்றும் பருத்தி ஆலைகள் என்ற பெயரில் அங்கு ஒரு கிளை உண்டு. அதிலுள்ள 6300 தொழிலாளர்களில் 1500 பேரை வேலை நீக்கம் செய்யும் ஒப்பந்தம் போட்டுக் கொண்டார். கம்பெனிக்கு 50 கோடி ரூபாய்வரை நட்டமேற்பட்டுவிட்டது; ஆலைகளை அதிநவீனமாக திருத்தியமைக்காமல் நடத்தவே முடியாது; இல்லையானால் மூடுவேன் என்று அடிக்கடி மிரட்டித் தொழிலாளர்களைப் பணியவைக்கவும், **அரசிடமிருந்து பெரும் கடன் முதலிய சலுகைகள் பெறவும்** நிர்பந்திக்கிறார்

இப்போது, பின்னி ஆலைகளின் தொழிற்சங்கத் தலைவராக இருப்பவர் போலிக் கம்யூனிஸ்டு முன்னாள் எம்.எல்.ஏ.வான உ.ரா.வரதராஜன். இவர், தொழிற்சாலை மூடப்பட்டு தொழிலாளர்கள்

படிப்பகம்

www.padippakam.com

வேலை இழந்து விடக்கூடாது என்கிற சரியான நோக்கத்தைக் கூறிக் கொண்டே சாராய உடையாரின் மேற்படி நிர்ப்பந்தங்களுக்குத் துணையாவதன் மூலம் அதைச் சாதித்துவிட முடியும் என்று முயன்றும் வருகிறார்.

மில்லின் சாயப்பட்டறைப் பகுதிக்குத் தேவையான சுத்தமான தண்ணீர் சென்னையில் கிடைக்கவில்லை; மில்லின் மின் உற்பத்திக்கான நிலக்கரியும் கிடைப்பதில்லை. எனவே 60 கோடி ரூபாய்க்கு இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கிக் கடனுடன் தென்னாற்காடு மாவட்டம் புவனகிரிக்கு சாயப் பட்டறைப் பகுதியை இடமாற்றம் செய்கிறோம் என்கிறார் சாராய உடையார்.

உடனே வரதராஜன் அரசு பெருநகர குடிநீர் வாரியம் மூலம் தினமும் 40 லட்சம் லிட்டர் நீர் ஏற்பாடு செய்துள்ளோம். ரயில்வே வாகனங்கள் ஒதுக்கி முன்னுரிமையோடு நிலக்கரி வர அனுமதி பெற்றுள்ளோம். 7000 தொழிலாளர்களின் உழைப்பு அளவு வேலைப்பளுவைக் கூட்டுவதற்கு ஒப்புக் கொண்டுள்ளோம். மேலும், பேச்சு வார்த்தை நடத்த தயார் என்கிறார்.

இது எப்படியாவது மில்லை மூடாமல் தடுப்பது, தொழிலாளருக்கு பாதிப்பு வராமல் காப்பது என்ற நோக்கமுடையதாக இருந்தாலும், முதலாளிக்கான காரியங்களை தொழிற்சங்கத் தலைமையே செய்து தருவது; முதலாளியின் மிரட்டலை ஏற்று சம்பள வெட்டு, சம்பள முடக்கம் வேலைப் பளுவை ஏற்றுவது, வேலை நீக்கம் ஆகிய வற்றுக்கு மறைமுகமாக ஒப்புக் கொள்வது ஆகிய தொழிலாளர் விரோத தன்மையும் உள்ளடங்கியதுதான். முந்தைய துரோகத் தலைவர்களைப் போலின்றி எப்படியாவது மில்லை மூடாது, தடுத்து வருகிறாரே என்ற நம்பிக்கை வரதராஜன் மீது இன்னமும் தொழிலாளரிடையே இருக்கிறது.

எது எப்படியானாலும், பின்னியை வைத்து மேலும் பல நூறு கோடி ரூபாய் கொள்ளையடித்து விடுவது என்ற நோக்கத்தோடு, சாராய உடையார் செயல்படுகிறார். அவரது திட்டத்தின்படி 60 கோடி ரூபாய் அரசு கடன் வாங்கிக் கொண்டு - இதில் பெருமளவு மானியமாகத் தள்ளுபடியாகி விடும் - பின்னியின் சாயப் பட்டறைப் பிரிவை புவனகிரிக்கு மாற்றிவிடுவது; அங்குள்ள உடையாரின் திருமகள் ஆலைக்கு ஒட்டு நிறுவனமாக அதை மாற்றிவிடுவது; அங்கு வைத்து குறைந்த சம்பளத்துக்குத் தொழிலாளர் முதுகை முறித்து கொத்தடிமைகளாக்கி விடுவது.

இதுதவிர, இப்போது சாராயத் தொழிலை விட உடையாருக்குக் கோடி கோடியாகக் கொட்டுவது கட்டுமானத் தொழில் - ரியல் எஸ்டேட் தான்; பின்னி மில்லுக்குச் சொந்தமாக ஏறக்குறைய 100 ஏக்கர் நிலம் சென்னையின் பிரதானப் பகுதிகளில் உள்ளது. 1982 பின்னி நிர்வாகக் கழகத் தீர்மானப்படியே அதன் ஒருபகுதியை கட்டுமானத் தொழிலுக்கு ஒதுக்குவது என்று, நகர உச்சவரம்பிலிருந்து விதிவிலக்கும் பெற்றுவிட்டது. எனவே, காலி நிலம் தவிர ஆலையின் பெரும்பகுதியையும் இடித்து விட்டு அடுக்குமாடிக் கட்டிடங்கள்

சாராய உடையாரும்
கூட்டாளி எத்திராஜும்



கட்டி விற்பதுதான் சாராய உடையாரின் நோக்கம்.

சென்னையின் கேந்திரப் பகுதியான பாரிமுனையில் உள்ள ஆர்மேனியன் தெரு - பின்னி தலைமை அலுவலகத்தை இடித்து பல அடுக்குமாடி அலுவலக அங்காடி - வளாகம் கட்டுவதற்கு பெருநகர வளர்ச்சி வாரியத்திடம் ஏற்கனவே அனுமதி பெற்று வேலையைத் துவங்கி விட்டார் உடையார்.

டில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரு நகரங்களில் ஹாஜி மஸ்தான், யூசுப் பட்டேல் போன்ற கடத்தல் - கருப்புப் பண மஃபியா கும்பல் இப்போது கட்டுமானத் தொழிலில்தான் பல ஆயிரம் கொள்ளையிடுகின்றனர். குடிசைவாசிகளையும் ஓரிரு மாடிக் கட்டிடக் குடித்தனக்காரர்களையும் அடித்து விரட்டியும் பூங்கா, விளையாட்டு மைதானங்கள், குளங்குட்டைகள் ஆகியவற்றுக்கு ஒதுக்கியுள்ள நிலத்தைக் கைப்பற்றியும் அதிகாரிகள் - அரசியல் வாதிகள் உடந்தையுடன் இந்த "ரியல் எஸ்டேட்" கொள்ளை நடக்கிறது.

அந்த வழியிலேயே ரௌடிகளை வைத்து நகரின் முக்கிய இடங்களைப் கைப்பற்றி கட்டுமான ரியல் எஸ்டேட் தொழிலில் கடந்த சில வருடங்களாகவே கொழுத்து வருகிறவர்தான் உடையார் இப்போது

**இப்போதுள்ள தொழிற்சங்கங்கள் தரகுத் தொழில் செய்யும் சட்டப்பூர்வ, அதிகாரப்பூர்வ அலுவலகங்களாக மாறிவிட்டன. முதலாளிகளுக்கு மிகவும் பழகிப்போன, வழக்கமான, அவர்கள் எளிதில் சமாளிக்கக் கூடிய வழிமுறைகள் - போராட்டங்களைத் தான் இவர்கள் பின்பற்றுகிறார்கள்.**

பின்னி மில் தொழிலாளர் வயிற்றிலடித்து பல ஆயிரம் கோடி ரூபாய்களைச் சுருட்டிக் கொள்வதில் இறங்கியுள்ளார். இதற்கு முதல் தவணையாக 6 கோடி ரூபாய் வரை ராஜீவ் - சந்திரசேகர் கும்பலுக்கு 'கப்பம்' கட்டியுள்ளார் என்று தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

பின்னி மில்லை மூடுவதற்காக உடையார் நிர்வாகம் கொடுத்த நோட்டீசை தொழிலாளர் துறை நிராகரித்து விட்டது; தொழிலாளர்களைத் தனித்தனியே மிரட்டி எழுதி வாங்கும் ரௌடித்தனத்தில் இறங்கி விட்டார் உடையார். இப்போது வேலை நிறுத்தம் போன்ற போராட்டங்கள் நடத்தினால், அதுவும் உடையாருக்குச் சாதகமாகி விடுமாதலால், செய்வதறியாது திணறுகிறது, வரதராஜன் தலைமை. மற்ற பிற தொழிற் சங்கத் தலைமைகளும் இப்படித் தான் உள்ளன.

இதற்கு என்ன காரணம்? உடையார், டி.வி.எஸ். போன்ற முதலாளிகளை எப்படித்தான் முறியடிப்பது? இப்போதுள்ள தொழிற்சங்கங்கள் தரகுத் தொழில் செய்யும் சட்டப்பூர்வ, அதிகாரப்பூர்வ அலுவலகங்களாக மாறிவிட்டன. முதலாளிகளுக்கு மிகவும் பழகிப்போன, வழக்கமான, அவர்கள் எளிதில் சமாளிக்கக் கூடிய வழிமுறைகள் - போராட்டங்களைத் தான் இவர்கள் பின்பற்றுகிறார்கள். முதலாளிகள் எதிர்பாராத அதிரடிப் போராட்டங்கள் - வழிமுறைகள் எதுவும் கிடையாது.

சட்டங்கள், முதலாளிகளின் வலிமையைச் சொல்லி தொழிலாளர்கள் பணிந்து போவதையே பழக்கப்படுத்துகிறார்கள். தொழிற் சங்கம், சொந்தப் பிழைப்பு என்கிற நான்கு சுவருக்குள் தொழிலாளரை அடக்கி வைக்கிறார்கள். தொழிற் பிரச்சினைகளையே கூட அரசியல் இயக்கங்கள் - போராட்டங்கள் இல்லாமல் தீர்க்க முடியாது. உடையார், டி.வி.எஸ்.போன்ற ரௌடிகள் - போலீசு குண்டர்களை வைத்துள்ள முதலாளிகளை எதிர்த்துத் தற்காப்புத் தாக்குதல் உட்பட எல்லாவிதமான புதிய போராட்டங்கள் - வழிமுறைகளின்றி இயக்கங்களை நடத்தவும் முடியாது. அத்தகு அடிப்படை ஆரம்ப வேலைகளில் துவங்கி புதிய போர்க்குணமிக்க அமைப்பைத் தொழிலாளர்கள் உருவாக்க வேண்டும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: செ.மதியழகன், 21, பா[illegible] தெரு, சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
அச்சிடுபவர் : நீட் பிரிண்டர்ஸ், 2 ஔலியா சாகிப் முதல் சந்து, எல்லிஸ் சாலை, சென்னை - 600 002.

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 REGD. NO. TN/MS(S) 344
www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா



குறும்புப் பார்வை, அவசர நடை, கையில் தகரப் பலகை, புத்தகப்பை - இவர்கள் பள்ளிக்குச் செல்கிறார்கள்!

பள்ளி என்றால்...? மரத்தடி, கொட்டகை, கான்கிரீட் பொந்து... இதில் ஏதாவது ஒன்று! இரைச்சலற்ற காற்றோட்டமான அறை, ஆய்வுக்கூடம், அறிவியல் விளக்க சாதனங்கள், உடற்பயிற்சி - விளையாட்டு கருவிகள், நூலகம், குடிநீர், ஒதுங்கும் அறை... இவற்றை கனவிலும் கூட இவர்கள் கண்டதில்லை. டீச்சரின் குட்டும், வாத்தியாரின் 'பெரம்பு'ம் தான் இவர்களை அறிவாளிகளாக்கும் அறிவியல் சாதனங்கள்!

பள்ளிப் படிப்போடு வீட்டில் கட்டாய தொழிற்கல்வி வேறு! மாடு மேய்ப்பது, 'ராட்டி' தட்டுவது, சுள்ளி சாணம் பொறுக்குவது, இவற்றின் நடுவில்தான் இவர்கள் கல்வி அறிவு தாகத்தையும் பருக வேண்டும்!

இது டில்லியிலுள்ள 'மாதிரி' பள்ளி! இயற்கையின் சூழலின் நடுவில்... அமைதி தவழும் குளுகுளு அறையில்... கண்ணையும் மனதையும் உறுத்தாத உயர்ந்த நண்பராக ஆசிரியர்... 5 பேருக்கு ஒரு கம்ப்யூட்டர் வகுப்பு, 'போர்' அடித்தால் அதிலேயே 'வீடியோ கேம்' விளையாட வசதி! இப்பள்ளிகளில் கரும்பலகை கல்வி, எழுத்தாணி, ஓலைச்சுவடி போல் காலாவதியாகி விட்டது. ஒலி - ஒளி - மின்னணு சாதனங்கள் மூலம் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

இந்த மேட்டுக்குடி சிறுவர்களின் வீடுகளில் அடுப்பங்கரை விவகாரங்கள் கூட கம்ப்யூட்டர் மூலம்தான் நிர்வகிக்கப்படுகிறது.

ஆரம்ப அறிவைக் கூட தர மறுக்கும் கல்விமுறை, ஆட்டுமந்தை பள்ளிகள்தான் ஏழை சிறுவர்களுக்கு! பண முதலைகளின் குலக்கொழுந்துகளுக்கு தேவைக்கு மீறிய நவீன கல்வி அறிவு! அரசு எந்திரம் அதிகார வர்க்கத்தின் இந்த வக்கிரத்தை சகித்துக் கொள்வது சரிதானா?



படிப்பகம்